بسم الله الرحمن الرحيم نحمده ونصلّي على رسوله الكريم وعلى عبده المسيح الموعود

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّأَنْتُمْ أَذِلَّةٌ

தொகுதி 1

வருடாந்திர சந்தா ரூபாய் 300/-

வாராந்திர பத்திரிகை

# பதர்

காதியான்

The Weekly BADAR Qadian TAMIL

இதழ் 12

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் ரஃபீக் அஹ்மது

18 ஷஅபான் 1437 ஹிஜ்ரி கமரி 26 மே 2016


## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது குறிப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவல–னாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

**எனது நிலை எப்படிப்பட்டது என்றால் மரணிக்கும் நிலை ஏற்பட்டால்தான் நோன்பை விட்டு விடுகின்றேன். எனது இயல்பு நோன்பை விட்டு விடுவதை விரும்பவில்லை. இவை அருளுக்குரிய நாட்களாகும். மேலும், அல்லாஹ்வின் அருளும், கருணையும் இறங்குகின்ற நாட்களாகும்.**

# வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து...

## திருக்குர்ஆன்

يَاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْا كُتِبَ عَلَيْكُمُ الصِّيَامُ كَمَا كُتِبَ عَلَى الَّذِيْنَ مِنْ قَبْلِكُمْ لَعَلَّكُمْ تَتَّقُوْنَ ○ اَيَّامًا مَّعْدُوْدٰتٍ ؕ فَمَنْ كَانَ مِنْكُمْ مَّرِيْضًا اَوْ عَلٰى سَفَرٍ فَعِدَّةٌ مِّنْ اَيَّامٍ اُخَرَ ؕ وَعَلَى الَّذِيْنَ يُطِيْقُوْنَهٗ فِدْيَةٌ طَعَامُ مِسْكِيْنٍ ؕ فَمَنْ تَطَوَّعَ خَيْرًا فَهُوَ خَيْرٌ لَّهٗ ؕ وَاَنْ تَصُوْمُوْا خَيْرٌ لَّكُمْ اِنْ كُنْتُمْ تَعْلَمُوْنَ ○

நம்பிக்கை கொண்டவர்களே! உங்கள் முன்னோருக்கு நோன்பு கடமையாக்கப்பட்டது போன்று உங்களுக்கும் அது கடமையாக்கப் -பட்டுள்ளது. இதனால் நீங்கள் (ஆன்மீக மற்றும் ஒழுக்க நீதியிலான பலவீனங்களில் இருந்து) தப்பித்து கொள்ளலாம்.

எனவே, கணிக்கப்பட்ட நாள்களில் (நோன்பு நோற்றுக் கொள்க). உங்களுள் நோயாளியாகவோ, பயணியாகவோ, இருப்பவர் (விடுபட்ட நோன்பை) மற்ற நாள்களில் நோற்க வேண்டும். இதற்குரிய ஆற்றலைப் பெறாதவர்கள் பரிகாரமாக ஓர் ஏழைக்கு உணவளிப்பது (அவருக்கு அதற்கான ஆற்றல் இருந்தால்) கடமையாகும். ஒருவர் முழுமையாகக் கட்டுப்பட்டு ஒரு நற்செயல் செய்வார் எனில், அது அவருக்கே நன்று. நீங்கள் அறிவுடையவர் என்றால், நோன்பு நோற்பது உங்களுக்குச் சிறந்தது (என்பதை உங்களால் புரிந்து கொள்ள முடியும்). (2:184-185)

## நபிமொழி

عَنْ اَبِيْ هُرَيْرَةَ رَضِيَ اللّٰهُ عَنْهُ قَالَ: قَالَ رَسُوْلُ اللّٰهِ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ: قَالَ اللّٰهُ عَزَّ وَجَلَّ: كُلُّ عَمَلِ ابْنِ اٰدَمَ لَهٗ اِلَّا الصِّيَامَ فَاِنَّهٗ لِيْ وَاَنَا اَجْزِيْ بِهٖ. وَالصِّيَامُ جُنَّةٌ فَاِذَا كَانَ يَوْمُ صَوْمِ اَحَدِكُمْ فَلَا يَرْفُثْ وَلَا يَصْخَبْ فَاِنْ سَابَّهٗ اَحَدٌ اَوْ قَاتَلَهٗ فَلْيَقُلْ: اِنِّيْ صَائِمٌ. وَالَّذِيْ نَفْسُ مُحَمَّدٍ بِيَدِهٖ لَخُلُوْفُ فَمِ الصَّائِمِ اَطْيَبُ عِنْدَ اللّٰهِ مِنْ رِيْحِ الْمِسْكِ. لِلصَّائِمِ فَرْحَتَانِ يَفْرَحُهُمَا. اِذَا اَفْطَرَ فَرِحَ، وَاِذَا لَقِيَ رَبَّهٗ فَرِحَ بِصَوْمِهٖ.

ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

"அல்லாஹ் இவ்வாறு கூறினான். மனிதனது அனைத்துப் பணிகளையும் அவன் தனக்காகவே செய்கின்றான். ஆனால், நோன்பு எனக்காக நோற்கப்படுகின்றது. நானே அதற்கான நற்கூலியாக ஆகி விடுவேன் அதாவது அவனது அந்த நன்மைக்குக் கூலியாக என்னைக் காண்கின்ற நற்பேற்றையும் அவனுக்கு வழங்குவேன்."

அல்லாஹ் கூறுகின்றான்: "நோன்பு கேடயம் ஆகும். எனவே, உங்களில் எவராவது நோன்பு நோற்றால் அவர் வீணான விஷயங்களைப் பேச வேண்டாம்; கூச்சலிட வேண்டாம். அவரை எவராவது ஏசிப் பேசினால் அல்லது அவருடன் சண்டையிட்டால் அவர் அதற்குப் பதிலாக நான் நோன்பு வைத்துள்ளேன் என்று கூறவும்.

முஹம்மது (ஸல்) அவர்களுடைய உயிர் எவனது பிடியில் உள்ளதோ அந்த இறைவன் மீது ஆணையாக! நோன்பாளியின் வாயில் இருந்துவரும் வாடை அல்லாஹ்வின் பார்வையில் கஸ்தூரியை விட அதிகமாக தூய்மையானதும் மணமிக்கதும் ஆகும். ஏனென்றால், அவர் இறைவனுக்காக தனது நிலையை இவ்வாறு ஆக்கிக் கொண்டார். நோன்பாளிக்கு இரண்டு மகிழ்ச்சிகள் விதிக்கப்பட்டுள்ளன. ஒரு மகிழ்ச்சி நோன்பு திறக்கும்போது அவருக்கு ஏற்படுகின்றது. இரண்டாவது மகிழ்ச்சி நோன்பின் காரணமாக அவருக்கு அல்லாஹ்வை சந்திக்கும் நற்பாக்கியம் கிடைக்கும் போது ஏற்படும்.

(புகாரி கிதாபுஸ் ஸவ்ம் பாபு ஹல் யகூலு இன்னீ ஸாயிமுன் இஸா ஷுதிம)

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

"சூரிய வெப்பத்திற்கு 'ரமழ்' என்று கூறுகின்றனர். ரமலானில் மனிதன் உண்பது, குடிப்பது மற்ற அனைத்து பௌதீக இன்பங்களையும் விட்டு விட்டு பொறுமையை மேற்கொள்கின்றான். இரண்டாவதாக, அல்லாஹ்வின் கட்டளைகளைப் பேணுவதில் ஒரு சூட்டையும் வெப்பத்தையும் உருவாக்கு -கின்றான். ஆன்மீக மற்றும் பௌதீக சூடும் வெப்பமும் சேர்ந்து ரமலான் (இரு வெப்பங்கள்) என்று ஆனது. அகராதிப் பொருள் கொடுப்பவர்கள் நோன்பின் மாதம் கோடை காலத்தில் வந்ததால் அது ரமலான் என்று அழைக்கப்பட்டது என்று கூறுகின்றனர். எனது பார்வையில் இது சரியானதல்ல. ஏனெனில், அரபிகளுக்கு மட்டும் இந்த தனிச்சிறப்பு இருக்க முடியாது. ஆன்மீக வெப்பம் என்பதன் கருத்து ஆன்மீக இன்பம் மற்றும் ஆர்வம், மார்க்க விஷயங்களில் ஏற்படும் சூடு என்பதாகும். கற்கள் சூடாகி விடும் அளவிலுள்ள அந்த சூட்டையே 'ரமழ்' என்று கூறுகின்றனர்.

(மல்ஃபூஸாத் தொகுதி 1, பக்கம் 136; 2003 -ஆம் ஆண்டு பதிப்பு - காதியான்)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

"ரமலான் மாதம் அருளுக்குரிய மாதம் ஆகும். துஆக்களுக்குரிய மாதமாகும்."

மேலும் கூறினார்கள்:

"எனது நிலை எப்படிப்பட்டது என்றால் மரணிக்கும் நிலை ஏற்பட்டால் தான் நோன்பை விட்டு விடுகின்றேன். எனது இயல்பு நோன்பை விட்டுவிடுவதை விரும்பவில்லை. இவை அருளுக்குரிய நாட்களாகும். மேலும் அல்லாஹ்வின் அருளும் கருணையும் இறங்குகின்ற நாட்களாகும்."

(மல்ஃபூஸாத் தொகுதி 1, பக்கம் 439; 2003 -ஆம் ஆண்டு பதிப்பு - காதியான்)


பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprieter Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

பல்வேறு மார்க்க விஷயங்கள் தொடர்பான கேள்விகளைக் கேட்பவர்களுக்கு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தாமே பதிலைக் கூறியுள்ளார்கள். சில நேரங்களில் அவர்களை மற்ற ஆலிம்களிடம் அனுப்பி வைப்பார்கள். ஆனால், வெளிப்படையாகப் பார்க்கும்போது மிகச் சிறிதாக இருக்கக் கூடிய பல கேள்விகளுக்கு பதில் கூறியவாறு அத்தகைய விவகாரங்களில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஜமாஅத்தின் ஆலிம்களின் கருத்தையும் சீர் செய்துள்ளார்கள். சில நேரங்களில் இறைவனால் அனுப்பப்பட்டவர் என்ற நிலையில் உலக மக்களுக்கு தனது வழிகாட்டல் அவசியம் என அன்னார் கருதும் விஷயத்தில் அன்னார் நேரடியாக அவ்விஷயத்திற்கான தீர்வைக் கூறி விடுவார்கள்.

பல்வேறு சந்தர்பங்களில் பல்வேறு சபைகளில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் எடுத்துக் கூறியுள்ள மார்க்கச் சட்டங்களைப் பாகிஸ்தான் நஸாரத்தே இஷாஅத் (பாகிஸ்தான் வெளியீட்டுத் துறை) மிகவும் உழைத்து சில ஆலிம்கள் மூலமாக அவற்றை ஒன்று திரட்டியுள்ளது. இது நூல் வடிவில் 'ஃபிக்ஹுதுல் மஸீஹ்' என்ற பெயரில் இங்கு தற்போது அச்சிடப்பட்டுள்ளது. பல்வேறு மார்க்க விவகாரங்களை அறிந்து கொள்வதற்காக ஜமாஅத் சகோதரர்கள் இந்த நூலை வாங்க வேண்டும்.

பயணத்தில் தொழுகையை கஸர் செய்வது ஜுமுஆ தொழுகையுடன் அஸர் தொழுகையையும் சேர்த்து தொழும்போது ஜுமுஆ தொழுகைக்கு முன்னுள்ள சுன்னத் தொழுகையைத் தொழுவது, பயணத்தில் ஜுமுஆ தொழுகையை நிறைவேற்றுவது, குறிப்பான சந்தர்பங்களில் விளக்கேற்றுவது, மத்தாப்பு கொளுத்துவது போன்ற விஷயங்கள் தொடர்பாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் வழங்கியுள்ள வழிகாட்டல்கள் பற்றி ஹுஸூர் அவர்கள் எடுத்து கூறினார்கள்.

சாஹிவால் (பாகிஸ்தான்) மாவட்டத்தின் முன்னாள் அமீரான மதிப்பிற்குரிய மர்ஹூம் டாக்டர் அதாவுர்ரஹ்மான் சாஹிப் அவர்களின் மனைவியான மதிப்பிற்குரிய அமத்துல் ஹஃபீழ் ரஹ்மான் சாஹிபா அவர்கள் வஃபாத்தாகி விட்டார்கள். மர்ஹூமாவின் நன்மைகள் எடுத்துக் கூறப்பட்டு அவர்களுக்காக ஜனாஸா காயிப் தொழுகையும் நிறைவேற்றப்பட்டது.

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசலில் 22 ஏப்ரல் 2016 அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1395 –ஆம் ஆண்டு ஷஹாதத் மாதம் 22 –ஆம் தேதி ஆற்றிய ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيْكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُوْلُهُ
أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ ۔ بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ۔ اَلرَّحْمٰنِ الرَّحِيْمِ ۔ مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ۔ اِيَّاكَ نَعْبُدُ
وَ اِيَّاكَ نَسْتَعِيْنُ ۔ اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ۔ صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ۔

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் ஒருமுறை இந்தக் கருத்தை எடுத்துரைத்தார்கள்: "அதாவது, மனிதனுக்கு இரண்டு விஷயங்களில் தூய்மை மிக அவசியமாகும். அதில் ஒன்று, சிந்தனை. மற்றொன்று, நுட்பமான உணர்வுகள் அதாவது நன்மைக்கான உணர்வுகள் ஆகும். மனிதனுடைய ஆழமான உணர்வுகள் என்னும் ஆற்றல் மனித உள்ளத்தின் தற்காலிக உணர்ச்சி வெளிப்பாட்டுடன் சம்பந்தப்பட்டதல்ல. மாறாக, உள்ளம் முழுமையான முறையில் தூய்மையாக இருக்கும் போதுதான் நிரந்தரமாக நிலைநிற்கக்கூடிய நல்ல மாற்றம், தூய்மையான உணர்வுகள் உருவாகும். அதேபோன்று சிந்தனை மற்றும் எண்ணத்தின் தூய்மை என்பது மூளை தூய்மையாக இருப்பதன் மூலமே கிடைக்கும். எப்பொழுதும் சரியான சிந்தனை உருவாகும் வகையில் மனிதனிடம் ஏற்படும் ஒளியின் நிலைக்கு *தன்வீர்* என்று பெயர். முயற்சி செய்து தூய எண்ணங்களை உருவாக்குவதன் பெயர் *தன்வீர்* அல்ல. மாறாக, அது எப்பொழுதும் சரியான எண்ணங்கள் உருவாகச் செய்யும் திறனின் பெயராகும். அந்நிலையில் ஒருபோதும் எவ்வகையான தவறான எண்ணங்களும் தோன்றாது. அது அல்லாஹ்வின் அருள் மற்றும் தொடர் முயற்சி ஆகியவற்றின் மூலமாக மட்டுமே ஏற்பட முடியும்."

எவ்வாறிருப்பினும், ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது மேற்கோளின் ஒளியில் இதனை விளக்குகிறார்கள். அன்னார் கூறுகின்றார்கள்: "நான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் இருந்து இதனை நேரடியாகச் செவியுற்றேன். சில நேரத்தில் அன்னாரிடம் சில மார்க்கச் சட்டங்கள் தொடர்பாக கேட்கப்படும். பொதுவாக அது தொடர்பான பணிகளில் முழுமையாக ஈடுபட்டிருக்கும் நபர்களுக்குத்தான் அந்த விஷயங்கள் பெரும்பாலும் நினைவில் இருக்கும். எனவே, ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அவ்வாறு கேட்கும் நபர்களிடம் ஹஸ்ரத் மவ்லானா நூருத்தீன் சாஹிபிடம் சென்று கேளுங்கள் அல்லது மவ்லவி அப்துல் கரீம் சாஹிப் அவர்களின் பெயரைக் குறிப்பிட்டு அவரிடம் சென்று கேளுங்கள் என்று கூறுவார்கள் அல்லது சில நேரம் மவ்லவி செய்யத் அஹ்ஸன் சாஹிப் அவர்களின் பெயரைக் குறிப்பிட்டு அவரிடம் கேட்கும்படி கூறுவார்கள் அல்லது வேறு சில மவ்லவிகளின் பெயரைக் குறிப்பிட்டு அவர்களிடம் சென்று கேட்கும்படி கூறுவார்கள். சில நேரங்களில் இறைவனால் அனுப்பப்பட்டவர் என்ற அளவில் உலக மக்களுக்கு தமது வழிகாட்டல் அவசியம் என அன்னார் கருதும் விஷயங்களில் அன்னார் நேரடியாக அதற்குரிய தீர்வைக் கூறி விடுவார்கள். ஆனால் எவ்விஷயங்களில் புதிதாக வழிகாட்டல் எதுவும் தேவைப்படாதோ அதுபோன்ற விஷயங்களை இன்ன மவ்லவி சாஹிபிடம் கேளுங்கள் என்று கூறி விடுவார்கள். ஒருவேளை அந்த மவ்லவி சாஹிப் அதே சபையில் அமர்ந்திருந்தால் மவ்லவி சாஹிப் இந்த விஷயத்திற்கான தீர்வு என்ன? என்று கேட்பார்கள். ஆனால், அவ்வாறு இன்ன மவ்லவி சாஹிபிடம் சென்று கேளுங்கள் எனக் கூறும் வேளையில் சில நேரங்களில் இந்த விஷயம் எம்மைப் பொருத்தவரை இப்படி இருக்க வேண்டும் என்றும் அன்னார் கூறி விடுவார்கள். மேலும் அவர்கள், நாம் அனுபவத்தில் கண்டுணர்ந்துள்ளோம். அதாவது, ஒரு விவகாரத்தில் நமக்கு தெளிவு கிடைக்காத போது அது தொடர்பாக எமது இயல்பு கூறுவது தீர்வாக அமைந்து விடுகிறது. பின்னர் அதற்கு திருக்குர்ஆன் மற்றும் ஹதீஸிலிருந்தும் சான்று கிடைத்து விடுகின்றது என்று கூறுவார்கள்.

இதுபோன்ற விஷயங்கள் தான் *தன்வீர்* என்று அழைக்கப்படுகின்றன என்று ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள். ஒரு ஆரோக்கியமானது தற்போது மனிதன் நான் ஆரோக்கியமாக இருக்கின்றேன் என்று கூறும் அளவிலுள்ள உடல் ஆரோக்கியமாகும். இன்னோர் ஆரோக்கியம் என்பது மனிதன் எதிர்காலத்திலும் ஆரோக்கியமாக இருப்பதாகும். அது சிந்தனை சரியாக இருப்பதாகும். அதாவது, மனித மூளையில் உருவாகக்கூடிய எண்ணங்கள் கூட சரியானதாக இருக்கின்ற நிலையின் பெயரே *தன்வீர்* ஆகும். *தன்வீர்* என்பது ஆரோக்கியமான எண்ணங்கள் உருவாகின்ற நிலையாகும். அதன் மூலம் எதிர்காலத்தில் மூளையில் உதிக்கும் எண்ணங்கள் அனைத்துமே சரியானதாகவே இருக்கும்."

அன்னார் கூறுகின்றார்கள்: "ஆன்மீக முன்னேற்றத்திற்கு *தன்வீரே ஃபிக்ர்* அதாவது ஆரோக்கியமான எண்ணங்கள் அவசியமாகும். அதேபோன்று இறையச்சம் மற்றும் பரிசுத்தம் என்பதும் ஆன்மீக முன்னேற்றத்திற்கு அவசியமாகும். உண்மை என்னவென்றால், *தன்வீர்* என்ற ஆரோக்கியமான எண்ணங்கள் என்பதன் தொடர்பு மூளையுடன் இருப்பது போன்று *தக்வா* (இறையச்சம்) என்ற தொடர்பு உள்ளத்துடன் உள்ளது.

பொதுவாக மக்கள் நன்மை மற்றும் இறையச்சத்தை ஒரே விஷயமாகக் கருதுகின்றார்கள். ஆனால், நன்மை என்பது நாம் செய்து முடித்த நல்ல காரியங்கள் அல்லது செய்ய நினைத்திருக்கும் நற்காரியங்கள் ஆகும். *தக்வா* என்பது மனிதனிடம் என்னென்ன எண்ணங்கள் தோன்றுமோ அவை அனைத்தும் நல்லெண்ணங்களாக அமைவதன் பெயராகும். நான் முன்னரே கூறியது போன்று, சிந்தனை மற்றும் எண்ணங்களின் தொடர்பு மூளையுடன் உள்ளது. அது *தன்வீர்* என்று அழைக்கப்படுகிறது. உணர்வுகள் எப்பொழுதும் நன்மையில் நிலை நிற்பது *தக்வா* (இறையச்சம்) ஆகும். அதன் விவகாரம் உள்ளத்துடன் தொடர்பு கொண்டுள்ளது. ஒரு மனிதனுக்கு *தன்வீரே அப்கார்* எனும் ஆரோக்கியமான எண்ணங்களும் இறையச்சம் நிறைந்த உள்ளமும் கிடைத்து விட்டால், தீமையின் தாக்குதல்களிலிருந்து அத்தகைய மனிதன் எப்பொழுதும் பாதுகாப்பாக இருப்பார். தீமையின் தாக்குதல்களிலிருந்து பாதுகாப்பாக இருக்கும் அத்தகைய மனிதன் பின்னர் இறைவனின் அருள்களின் கீழ் வந்து விடுவார்."

(அல் ஃபஸ்ல் 9 மார்ச் 1938, பக்கம் 2, தொகுதி 26, இதழ் 55)

பொதுவான விவகாரங்களில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கேள்வி கேட்கும் நபரை ஜமாஅத்தின் ஆலிம்களிடம் அனுப்பி வைத்து விடுவார்கள் என ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறியிருந்தார்கள். ஆனால், பல கேள்விகள் உள்ளன. அவை வெளிப்படையில் சிறியதாக இருக்கும் அத்தகைய விவகாரங்களில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஜமாஅத்திலுள்ள ஆலிம்களின் கருத்துக்களையும் கூட சீர்செய்துள்ளார்கள்.

உதாரணமாக, பயணத்தில் தொழுகைகளை கஸர் செய்வது தொடர்பான விவகாரத்தில், எதனை பயணம் என்று கருதி அதில் கஸர் தொழுகைக்கான கட்டளையை செயல்படுத்துவது என்ற கேள்விக்குப் பதிலளித்தவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்:

“எனது கருத்து என்னவென்றால், மனிதன் தேவையற்ற கஷ்டங்களை தன் மீது இட்டுக் கொள்ளக் கூடாது. பொது வழக்கில் எது பயணம் என்று கருதப்படுமோ அது 2, 3 மைல் தூரமாக இருந்தாலும் அதில் கஸர் தொழுகைக்கான கட்டளையை செயல்படுத்துங்கள். إِنَّمَا الأَعْمَالُ بِالنِّيَّاتِ *இன்னமல் அஃமாலு பின்னியாத்* – அதாவது செயல்களின் அடிப்படை எண்ணங்களாகும் என்ற ஹதீஸின்படி செயல்படுங்கள். சில நேரங்களில் நாம் 2, 3 மைல்கள் நண்பர்களுடன் நடைபயணமாகவே சென்று விடுகின்றோம். ஆனால், எவருடைய உள்ளத்திலும் அது பயணம் என்ற எண்ணம் வருவதில்லை. ஆனால், மனிதன் தனது சாமான்களை எடுத்துக் கொண்டு செல்லும் போது அவன் பயணியாக இருக்கின்றான். ஷரீஅத்தின் (மார்க்கச் சட்டத்தின்) அடிப்படை கஷ்டங்கள் அல்ல. பொது வழக்கில் எதனை நீங்கள் பயணம் எனக் கருதுவீர்களோ அதுவே பயணமாகும்.” (மல்ஃபூஸாத் தொகுதி 2, பக்கம் 211; 1985 -ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

ஆக, பயணம் என்ற எண்ணத்தில் நீங்கள் பயணிக்கும் போதுதான் அது பயணமாக அமையும் என்பது இதிலிருந்து தெளிவாகி விடுகின்றது. கடந்த நாட்களில் நான் பள்ளிவாயில் திறப்பு விழாவிற்காக லீசெஸ்டர் (Liecester) சென்றிருந்தேன். அங்கிருந்து நான் உடனே திரும்பி வர இருந்தேன். அங்கு இஷா தொழுகையை கஸர் செய்யாமல் முழுமையாக தொழ வைத்தேன். அதனால் பலருக்கு கஸர் செய்து தொழ வைக்கப்படவில்லை என்ற கேள்வி எழுந்தது. பயணச் சாமான்கள் எடுத்துக் கொண்டு பயணம் என்ற எண்ணத்தில் செய்யப்படுவதுதான் பயணமாகும் என்ற ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் இந்த வழிகாட்டுதலே எனது மனதில் அப்போது இருந்தது. எனவே, அது பயணமாக இருக்கவில்லை. மேலும், நான் உடனே திரும்பி விட இருந்தேன். எனவே, நான் கஸர் செய்து தொழ வைக்கவில்லை. அடுத்து, செயல்களின் அடிப்படை எண்ணங்களாகும் என்பதையும் கருத்தில் கொள்ள வேண்டும். அதனை மனிதன் கருத்தில் கொண்டால் தேவையில்லாமல் மனிதன் தன்னை கஷ்டத்திற்குள்ளாக்கிக் கொள்ள மாட்டான். அதேபோன்று தேவைக்கு அதிகமான எளிமையையும் மனிதன் தேட மாட்டான். இன்னும் சொல்லப்போனால் அல்லாஹ் மற்றும் அவனது தூதரின் கட்டளையின்படி செயல்படுவதே நோக்கமாக இருக்க வேண்டும்.

இதனை தெளிவுபடுத்தியவாறு ஓரிடத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: “ஆயினும், உங்கள் எண்ணத்தை நன்றாக ஆய்வு செய்து கொள்ளுங்கள். இதுபோன்ற அனைத்து விவகாரங்களிலும் இறையச்சத்தை மிகவும் கருத்தில் கொள்ள வேண்டும். ஒரு நபர் தினமும் சாதாரண வியாபாரத்திற்குப் பயணம் செய்கிறார் என்றால் அது பயணமல்ல. மாறாக, மனிதன் சிறப்பான ஏற்பாடுகளுடன் பயணம் செய்வதும், மேலும் அந்தப் பணிக்காக வீட்டைவிட்டு வெளியேறுவதும்தான் பயணம் ஆகும். மேலும், பொது வழக்கிலும் அது பயணம் என்று அழைக்கப்பட வேண்டும். பாருங்கள்! நாம் 2, 3 மைல்கள் உலாவுவதற்காக தினமும் சென்று விடுகின்றோம். ஆனால், இது பயணமல்ல. அதுபோன்ற சந்தர்ப்பத்தில் உள்ளத்தின் அமைதியைப் பார்க்க வேண்டும். உள்ளம் எந்த நெருடலுமின்றி அதனை பயணம் என்று சான்று பகர்ந்தால் கஸர் செய்து தொழுகையை நிறைவேற்றுங்கள். إِنَّمَا الأَعْمَالُ بِالنِّيَّاتِ *இஸ்தஃப்தே கல்பக* – உங்களுடைய உள்ளத்திடம் ஃபத்வா கோருங்கள. பின்னர், அதன்படி செயல்படுங்கள். ஆயிரம் ஃபத்வாக்கள் இருந்தாலும், நம்பிக்கை கொண்டவர் நல்லெண்ணத்துடன் உள்ளத்தின் அமைதியைக் கருத்தில் கொள்வது சிறந்ததாகும்.” (மல்ஃபூஸாத் தொகுதி 10, பக்கம் 99-100; 1985 -ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

எனவே, எண்ணம் மற்றும் உள்ளத்தின் ஃபத்வாக்களை சில சந்தர்ப்பங்களில் மனிதன் கைக்கொள்ள வேண்டும். எண்ணம் நல்லதாக இருக்க வேண்டும். அந்த நல்லெண்ணத்துடன் உள்ளத்தின் ஃபத்வாக்களையும் பெற்றுக் கொள்ள வேண்டும். இங்கு தலைமையகத்திற்கு வரும்போது, தொழுகைகளை கஸர் செய்து தொழ வேண்டுமா? அல்லது கூடாதா? என ஒருவர் கேள்வி கேட்டார். இந்தக் கேள்வி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் கேட்கப்பட்டது. இப்போதும் கூட சிலர் இதுபோன்று கேட்கின்றனர். தலைமையகத்திற்குச் செல்லும்போது கஸர் கிடையாதா? உதாரணமாக, காதியான், ரப்வாவிற்குச் செல்லும்போது கஸர் படி செயல்படலாமா? என்ற கேள்வி எழுகிறது.

ஆக, ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் கேட்கப்பட்ட போது அன்னார் கூறினார்கள்: “எவர் மூன்று நாட்களுக்கான எண்ணத்துடன் இங்கு வருவாரோ அவருக்கு கஸர் செய்வது ஆகுமானதாகும். எனது அறிவின் அடிப்படையில் பயணத்திற்கான உறுதியான எண்ணம் கொண்டிருந்தால், அது 2, 3 மைல்களாகவும் இருந்தாலும் சரியே, அதில் கஸர் செய்வது ஆகுமானதாகும். ஆயினும், இமாம் உள்ளூர்வாசி என்றால், அவருக்குப் பின்னால் நின்று தொழுகின்றபோது முழுமையாக தொழுகையை நிறைவேற்ற வேண்டும். (இமாம் உள்ளூர்வாசியாக இருந்தால் அவர் முழுமையாக தொழுகையை தொழ வைப்பார். பயணியும் அவருக்குப் பின்னால் நின்று முழுமையாக தொழ வேண்டும்.) அதிகாரிகளின் சுற்றுப் பயணம், பயணமாக இருப்பதில்லை. அதிகாரிகள் சுற்றுப் பயணம் செய்கின்றனர். அவர்களின் பயணம் எப்படிப்பட்டதென்றால் ஒருவர் தமது தோட்டத்தைச் சுற்றிப் பார்ப்பது போன்றதே ஆகும். அது பயணமாக ஒருபோதும் அமையாது. (மல்ஃபூஸாத் தொகுதி 5, பக்கம் 311; 1985 -ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் சில நேரங்களில் தமது சஹாபாக்களுக்கு எவ்வாறு விவகாரங்களைப் புரிய வைத்து விடுவார்கள் என்பது தொடர்பாக காஸி அமீர் ஹுஸைன் சாஹிப் கூறுகின்றார்கள்: “பயணத்தில் சாதாரண சூழலில் கஸர் செய்வது ஆகுமானது அல்ல என நான் ஆரம்பத்தில் எண்ணம் கொண்டிருந்தேன். மாறாக, போரின் சூழலில் குழப்பத்திற்கான அச்சம் என்ற நிலையில் மட்டுமே ஆகுமானது என நான் எண்ணியிருந்தேன். நான் இந்த விவகாரத்தில் ஹஸ்ரத் முதல் கலீஃபா அவர்களிடம் பலமுறை விவாதித்துள்ளேன்.”

காஸி சாஹிப் தொடர்ந்து கூறுகின்றார்கள்: “குர்தாஸ்பூரில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் வழக்கு நடந்த நாட்களில் ஒருமுறை நானும் அங்கு சென்றிருந்தேன். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடன் ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் மற்றும் மவ்லவி அப்துல் கரீம் சாஹிபும் இருந்தனர். ஆனால், ளுஹர் தொழுகைக்கான நேரம் வந்த போது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தொழ வைக்கும்படி என்னிடம் கூறினார்கள். நான் உள்ளத்தில் உறுதியான எண்ணம் கொண்டேன். இன்று எனக்கு சந்தர்ப்பம் அமைந்துள்ளது. நான் கஸர் செய்ய மாட்டேன். முழுமையாக தொழுவேன். இதன் மூலம் இந்த விவகாரத்திற்கான தீர்வும் கிடைத்து விடும் என்று எண்ணினேன். நான் தொழுத பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நிச்சயம் வழிகாட்டுவார்கள் என எண்ணினேன்.”

காஸி சாஹிப் தொடர்ந்து கூறுகின்றார்கள்: “நான் இந்த முடிவை எடுத்து அல்லாஹு அக்பர் எனக் கூறி கையை உயர்த்த இருந்தேன். கஸர் செய்ய மாட்டேன் என்ற எண்ணத்துடன் நான் கையை உயர்த்த இருந்தேன். அப்போது எனக்குப் பின்னால் வலது பக்கம் நின்றிருந்த ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஒரு அடி முன் வந்து எனது காதிற்கு அருகில் வந்து காஸி சாஹிப் 2 ரக்அத்துகள் மட்டும்தானே தொழுவீர்கள்? எனக் கேட்டார்கள். அதற்கு நான் ஹுஸூர்! நான் 2 ரக்அத்துகள்தான் தொழுவேன் எனக் கூறினேன்.”

காஸி சாஹிப் கூறுகின்றார்கள்: “அந்தத் தருணத்திலேயே எனது சந்தேகம் தீர்ந்தது. மேலும் எனது முந்தைய கருத்தை நான் விட்டு விட்டேன்.” (ஸீரத்துல் மஹ்தி தொகுதி 1, பக்கம் 24-25, அறிவிப்பு எண்.33) ஆக, இதுதான் சஹாபாக்களின் நிலையாகும். எவ்வாறு முழு மனதுடன் செயல்பட்டார்கள் என்று பாருங்கள்! இந்த இடத்தில் இதனையும் நான் கூறிக் கொள்கிறேன். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் மார்க்கச் சட்டங்களை எடுத்துரைத்துள்ளார்கள். எல்லா விஷயத்தையும் ஆலிம்களிடமே அனுப்பி வைத்தார்கள் என்பதல்ல. உரிய தருணத்தில் நேரடியாக அன்னார் வழிகாட்டியுள்ளார்கள். இதுபோன்ற சந்தர்ப்பங்களில் பல்வேறு சபைகளில் அன்னார் எடுத்துரைத்த மார்க்கச் சட்டங்களை பாகிஸ்தான் நஸாரத்தே இஷாஅத் (பாகிஸ்தானின் வெளியீட்டுத் துறை) தற்போது கடின உழைப்பு செய்து சில ஆலிம்கள் மூலமாகவும் ஜாமிஆவின் ஃபிக்கா பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள் மூலமாகவும் அதனை ஒன்று திரட்டியுள்ளது. ‘ஃபிக்ஹுதுல் மஸீஹ்’ என்ற பெயரில் இங்கு தற்போது அச்சிடப்பட்டுள்ளது. ஏராளமான விஷயங்கள் அதில் இடம் பெற்றுள்ளன. ஜமாஅத் உறுப்பினர்கள் மார்க்கத்தின் பல்வேறு விஷயங்களை அறிந்து கொள்ள அதனை வாங்கிப் படிக்க வேண்டும். இந்த மார்க்கச் சட்டங்களை ஒன்று திரட்டி, மிகவும் நல்ல முறையில் அச்சிட்ட மக்களுக்கு அல்லாஹ் நற்கூலியை வழங்குவானாக! அல்லாஹ் எனக்கு நற்பேறு வழங்கினால் நான் அவ்வப்போது அந்த மார்க்கச் சட்டங்களை எடுத்துரைப்பேன். ஜுமுஆ தொழுகையுடன் அஸர் தொழுகை சேர்த்து தொழ வைக்கப்பட்டால் ஜுமுஆ தொழுகைக்கு முன்புள்ள சுன்னத் தொழுகையை தொழ வேண்டும்.

இது தொடர்பாக விவரித்தவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் வழிகாட்டல் அடிப்படையில் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: “நான் பயணத்தில் இருந்த போது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் கேட்ட கேள்விக்கு அன்னார் கூறினார்கள். இது பற்றி சில நண்பர்களிடம் கருத்து வேறுபாடு ஏற்பட்டது. அதாவது ஜமஅ செய்து தொழ வைக்கப்படும் போது முந்தைய இடைப்பட்ட மற்றும் பிந்தைய அனைத்து சுன்னத்துகளையும் தொழ வேண்டியதில்லை என ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறியுள்ளார்கள். ளுஹர், அஸர் ஜமஅ செய்யப்பட்டால் முந்தைய மற்றும் இடைப்பட்ட சுன்னத்துகள் தொழ வேண்டியதில்லை அல்லாஹ்

மக்ரிப், இஷா ஜமஅ செய்யப்பட்டால் இடைப்பட்ட மற்றும் பிந்தைய சுன்னத்துகள் தொழ வேண்டியதில்லை.

ஆனால், ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: "இங்கு கருத்து வேறுபாடு ஏற்பட்ட விவகாரம் இதுவாகும். அதாவது ஒரு பயணத்தில் நான் ஜுமுஆ மற்றும் அஸர் தொழுகைகளை ஜமஅ செய்து தொழ வைத்தேன். மேலும் ஜுமுஆவின் முந்தைய சுன்னத்துகளையும் நான் தொழுதேன். இந்த இரண்டு விஷயங்களுமே சரிதான். ஃபர்ள் தொழுகைகள் ஜமஅ செய்து தொழ வைக்கப்படும்போது சுன்னத் தொழுகைகள் தொழத் தேவையில்லை என்பது சரியே. அதே நேரத்தில் ஜுமுஆ தொழுகைக்கு முன்பு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் சுன்னத் தொழுகையை தொழுது வந்துள்ளார்கள். நான் பயணத்தில் அதனை தொழுதுள்ளேன். தொழுது வருகின்றேன். ஜுமுஆ தொழுகைக்கு முன்னால் தொழப்படுகின்ற நவாஃபில்கள் ளுஹர் தொழுகைக்கு முன்னர் தொழப்படுகின்ற சுன்னத்துகளிலிருந்து வேறுபட்டதாகும். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஜுமுஆவின் கண்ணியத்தைக் கருத்தில் கொண்டு அந்த சுன்னத்துகளை நிலைநாட்டியுள்ளார்கள். பயணத்தில் ஜுமுஆ தொழுவதும் ஆகுமானதாகும். தொழாமல் இருப்பதும் ஆகுமானதாகும். அதாவது மனிதன் பயணத்தில் இருக்கின்ற நிலையில் முடிந்தால் ஜுமுஆ தொழவும் செய்யலாம். தொழாமலும் இருக்கலாம். அன்னார் தொழுகையை விட்டு விட்டார்கள் என்பது அதன் பொருள் அன்று. மாறாக, அன்னார் ளுஹர் தொழுதார்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: "நான் பயணத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை ஜுமுஆ தொழுதும் பார்த்துள்ளேன். சில சந்தர்ப்பங்களில் ஜுமுஆவிற்குப் பகரமாக ளுஹர் தொழுதும் பார்த்துள்ளேன்."

ஒருமுறை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஒரு வழக்கிற்காக குர்தாஸ்பூர் சென்றிருந்தார்கள். அங்கு அன்னார் மும்முரமாக பணியில் ஈடுபட்டிருந்தார்கள். அதனால் இன்று ஜுமுஆ கிடையாது எனக் கூறினார்கள். ஏனென்றால், நாம் பயணத்தில் உள்ளோம் எனக் கூறினார்கள். சிலர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் வந்தார்கள். சில பயணங்களின் நிமித்தம் ஹஸ்ரத் முதல் கலீஃபா காதியான் சென்றிருந்தார்கள். அன்னார் ஜுமுஆ தொழ வைத்து வந்தார்கள். எனவே தான், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இன்று ஜுமுஆ கிடையாது எனக் கூறியதாக சிலர் எண்ணிக் கொண்டனர். மேலும் ஹுஸூர் எனக்கும் ஜுமுஆ தொழுகை நடத்தத் தெரியும் என ஒருவர் கூறினார். அதற்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் உங்களுக்கு தெரிந்திருக்கலாம். ஆனால், நாம் தற்போது பயணத்தில் உள்ளோம். எனவே, இன்று நாம் ளுஹர் தொழுகின்றோம் எனக் கூறினார்கள். அதைக் கேட்ட அந்த நபர், ஹுஸூர்! எனக்கு நன்றாக ஜுமுஆ தொழ வைக்கத் தெரியும் எனக் கூறினார். நான் பலமுறை தொழ வைத்துள்ளேன் என்றும் கூறினார். அந்த நபருக்கு ஜுமுஆ தொழுகை நடத்த வேண்டும் என ஆசை இருந்ததை உணர்ந்த ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள், சரி ஆகட்டும்! இன்று ஜுமுஆ தொழுவோம் எனக் கூறினார்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: நான் பயணத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை ஜுமுஆ தொழுதும் பார்த்துள்ளேன். ஜுமுஆ தொழாமல் ளுஹர் மட்டுமே தொழுததையும் பார்த்துள்ளேன். ஜுமுஆ தொழப்பட்டால் நான் முந்தைய சுன்னத்துகளைத் தொழுதுள்ளேன். மேலும், அவை தொழப்பட வேண்டும் என்பதுதான் எனது கருத்தும் ஆகும். இது ஒரு பொதுவான ஃபத்வா ஆகும். ஏனென்றால், அவை பொதுவாக தொழப்படும் சுன்னத்துகளிலிருந்து வேறுபட்டதாகும். மேலும் ஜுமுஆவின் கண்ணியத்தை வெளிப்படுத்தும் வகையில் அவை தொழப்பட வேண்டும். (அல்ஃபஸ்ல் 24 ஜனவரி 1942, பக்கம் 1, தொகுதி 20, இதழ் 21) எனவே, பயணத்தில் ஜுமுஆ தொழ வைக்கப்பட்டால் அத்துடன் அஸர் சேர்த்து தொழப்படும் நிலையிலும் ஜுமுஆவிற்கு முந்தைய சுன்னத்துகளைத் தொழ வேண்டும். மனித வாழ்க்கையில் தனிப்பட்ட மகிழ்ச்சிக்கான சந்தர்ப்பங்களும் வருகின்றன. ஜமாஅத் அளவிலான மகிழ்ச்சிக்குரிய சந்தர்ப்பங்களும் வருகின்றன. தேசம் சார்ந்த மகிழ்ச்சிகரமான சந்தர்ப்பங்களும் வருகின்றன. மகிழ்ச்சிக்குரிய அந்தத் தருணங்களில் அது கொண்டாடப்படுகின்றது. ஆனால், சிலர் அதில் கூடுதல், குறைவு செய்து விடுகின்றனர். ஒன்று மகிழ்ச்சியைக் கொண்டாடுவதில் வரம்புமீறிச் செலவு செய்கின்றனர் அல்லது மார்க்கத்தின் பெயரால் அல்லது வேறு ஏதாவது காரணம் கூறி மகிழ்ச்சியைக் கொண்டாடுவதைப் பாவமாகக் கருதுகின்றனர். இந்த இரண்டு நிலைகளையும் இஸ்லாம் தடை செய்துள்ளது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இக்காலத்தில் இஸ்லாமிய போதனைகளுக்கேற்ப நடுநிலையான வழிகளில் நம்மை வழிநடத்த வந்துள்ளார்கள். அன்னார் ஒவ்வொரு சின்னஞ்சிறு விஷயத்திலும் நமக்கு வழிகாட்டியுள்ளார்கள். மார்க்க விஷயங்களிலும், உலக விஷயங்களிலும் வழிகாட்டியுள்ளார்கள். தொழுகை தொடர்பான விஷயங்களை நான் குறிப்பிட்டு வந்துள்ளேன்.

இப்போது ஒரு உலக மகிழ்ச்சியைக் கொண்டாடுவதில் எப்படி செயல்பட வேண்டும்? என்பது தொடர்பாக அன்னார் என்ன வழிகாட்டியுள்ளார்கள்? என்று பார்ப்போம். அதுபற்றி ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் செயலை நம்முன் வைத்துள்ளார்கள்.

அன்னார் கூறுகின்றார்கள்: "ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடமிருந்து விளக்கேற்றுவது ஆகுமானதாக நிரூபணமாகிறது." அதாவது சிறப்பான சந்தர்ப்பங்களில் விளக்குகள் ஏற்றப்படுகின்றன. அதாவது, ஒளி அலங்காரம் செய்யப்படுகிறது. விளக்கேற்றுவது தொடர்பான விளக்கம் கூறுவதற்குக் காரணம் விக்டோரியா மஹாராணி நூற்றாண்டு விழாக் கொண்டாட்டத்தின் போது விளக்குகள் ஏற்றப்பட்டன அல்லது வேறு ஏதோ சந்தர்ப்பத்தில் விளக்குகள் ஏற்றப்பட்டன.

அப்போது ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறினார்கள்: "விக்டோரியா மஹாராணியின் ஜுபிளி சந்தர்ப்பத்தில் விளக்கேற்றப்பட்டது. இவ்வாறாக, ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடமிருந்து விளக்கேற்றியது ஆகுமானது எனத் தெரிய வருகின்றது. அன்னார் இரண்டு முறை அதாவது விக்டோரியா மஹாராணி ஜுபிளி மற்றும் எட்வர்டு அரசரின் ஜுபிளி கொண்டாட்டத்தின் போது விளக்குகள் ஏற்றியுள்ளார்கள் அல்லது இரண்டு ஜுபிளியும் விக்டோரியா மஹாராணி உடையதாகவும் இருக்க வேண்டும். இரண்டு சந்தர்ப்பங்களிலும் விளக்கு ஏற்றப்பட்டது. ஒளி அலங்காரம் செய்யப்பட்டது."

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: "குழந்தைப் பருவத்தில் இவ்விஷயங்கள் நல்லதாகத் தென்படுகின்றன. எனக்கு நன்றாக நினைவு உள்ளது. முபாரக் பள்ளிவாயிலின் ஓரங்களில் விளக்கு ஏற்றப்பட்டது. அந்தக் காலத்தில் விளக்கில் எண்ணெய் ஊற்றப்பட்டு ஒளியூட்டப்பட்டு வந்தது."

அன்னார் கூறுகின்றார்கள்: "எங்கள் வீட்டிலும், மத்ரஸாவிலும் பள்ளிவாயில் –களிலும் விளக்குகள் ஏற்றப்பட்டன. மீர் முஹம்மது இஸ்ஹாக் சாஹிபும் இதற்கு சாட்சி பகிர்ந்துள்ளார்கள்." எனவே, வெறும் விளக்குகள் ஏற்றுவதை எதிர்ப்பதற்கான கேள்விக்கே இடமில்லை. சிலர் விளக்குகள் ஏற்றுவது தவறாகும்; சரியால்ல எனக் கூறுகின்றனர். அப்படி எதுவும் கிடையாது என்று ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்.

அன்னார் கூறுகின்றார்கள்: "ஹகமன் மற்றும் அத்லன் – அதாவது நெறி நீதி தீர்ப்பவராக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இருப்பதால் அன்னார் திருக்குர்ஆனின் தெளிவான கட்டளைகளுக்கு எதிராக எந்தவொரு விஷயமும் பேசியது கிடையாது. விளக்குகள் ஏற்றப்படுவது அன்னாரிடமிருந்து நிரூபணமாகி உள்ளது. அதற்கான சாட்சிகளும் உள்ளன. அல் ஹகம் பத்திரிகையிலும் இது வெளியாகியுள்ளது. எனவே, சிறப்பான சந்தர்ப்பங்களில் இதுபோன்று விளக்கேற்றுவதற்கு எந்தத் தடையும் இல்லை. ஏன் செய்ய வேண்டும்? எப்போது செய்ய வேண்டும்? வீண் செலவு போன்ற வாதங்கள் முன் வைக்கப்படுகின்றன."

எவ்வாறிருப்பினும் அன்னார் கூறுகின்றார்கள்: "ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இந்த வடிவில் மகிழ்ச்சியைக் கொண்டாடியுள்ளார்கள் என்றால் அது தன்னகத்தே நுட்பமான ஞானத்தைக் கொண்டுள்ளது. நம்பிக்கை கொண்டவரின் ஒவ்வொரு கூற்றும் தன்னகத்தே நுட்பமான ஞானத்தைக் கொண்டுள்ளது. குறிப்பாக விளக்கேற்றுவது பரந்த அளவில் செய்யப்படும் போது, ஒவ்வொரு வீட்டிலும் விளக்கேற்றுவது அவசியமாக்கப்படும் போது ஒரு பெரிய செலவீனம் ஏற்படுகிறது. ஆனால், அதற்கு எதிரில் பெரிய நன்மை தென்படுவதில்லை. ஆயினும், எங்கு தேசிய மற்றும் அரசியல் தேவை இருக்கிறதோ எங்கு அதிக வெளிச்சத்திற்கான தேவை உள்ளதோ அங்கு செய்யப்பட்டால் எந்தத் தவறும் இல்லை. உதாரணமாக, ஹஸ்ரத் மீர் மஹ்மூது இஸ்ஹாக் சாஹிப் கூறுகின்றார்கள்: அறிவிப்புகளில் வருகிறது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் சார்பாக பள்ளிவாயில்களில் அதிக ஒளி ஏற்றுவதற்கான ஏற்பாடு செய்யப்பட்டது."

அன்னார் கூறுகின்றார்கள்: "பள்ளிவாயில் எப்படிப்பட்ட இடம் என்றால் அங்கு அதிக வெளிச்சத்திற்கான தேவை உள்ளது. ஏனென்றால், அங்கு மக்கள் திருக்குர்ஆன் ஓதுவார்கள் அல்லது வேறு மார்க்கப் பணிகளைச் செய்யலாம். மார்க்கப் புத்தகங்களைப் படிக்கலாம். எனேவ, ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் பள்ளிவாயிலில் அதிக ஒளிக்கான ஏற்பாடு செய்தார்கள் என்றால், அதில் ஹிக்மத் உள்ளது. நாம் பார்த்த வரையில் மனித இனம் மிக அதிகமாகப் பயன் பெறும் வகையிலேயே இஸ்லாத்தில் மகிழ்ச்சிகள் கொண்டாடப்படுகின்றன. உதாரணமாக, பெருநாள் உள்ளது. அதில் குர்பானி செய்வதன் மூலம் ஏழைகளுக்க இறைச்சி கிடைக்கிறது. ஈதுல் ஃபித்ர் சந்தர்ப்பத்தில் ஃபித்ரானா மூலம் ஏழைகளுக்கு உதவி செய்யப்படுகின்றது. இஸ்லாம் எங்கெல்லாம் மகிழ்ச்சியைக் கொண்டாட நமக்கு கட்டளையிட்டுள்ளதோ அங்கெல்லாம் தேசம் மற்றும் மனித இனத்திற்கு மிக அதிகமாக பயன் கிடைக்கும் வகையில் கொண்டாட வேண்டும் என அழுத்தம் கொடுத்துள்ளது. ஆனால், விளக்குகள் ஏற்றுவதால் அந்த அளவுக்கு பயன் கிடைக்க முடியாது தான். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் விளக்கேற்றினார்கள் என்றால், அது அரசியல் காரணத்தை அடிப்படையாகக் கொண்டிருந்தது. சில நேரங்களில் அன்னார் மத்தாப்பு பற்ற வைக்க நமக்கு அனுமதி வழங்கியுள்ளார்கள். அதன் மூலமாக குழந்தைகள் மனமகிழ்கின்றனர்."

மேலும் அன்னார் கூறுகின்றார்கள்: "கந்தகம் எரிவதால் குழந்தைகள் மனமகிழ்வதோடு மட்டுமல்லாமல் கிருமிகளும் செத்து விடுகின்றன. எனவே, வெறும் குழந்தைகளை மகிழ்விக்க மட்டும் நமக்கு அனுமதி தரப்படவில்லை.

மாறாக, மத்தாப்பு எரிப்பதன் மூலம் கந்தகம் எரிந்து, அதன் மூலம் சுற்றுப்புறச் சூழல் தூய்மையாகின்றது. ஆக, அன்னார் பலமுறை புஷ்வானம் போன்றவைகளை வாங்கித் தந்துள்ளார்கள். இது வெளிப்படையில் ஒருவகையான வீண் விரயமாக இருக்கலாம். ஆனால், அதில் தற்காலிக நன்மையும் உள்ளது. பெரிய அளவில் நன்மை இல்லையென்றாலும் அதில் தற்காலிக நன்மையும் உள்ளது. பெரிய அளவில் நன்மை இல்லை என்றாலும் அதன் மூலம் குழந்தைகள் மனமகிழ்கின்றனர். மேலும் பிள்ளைகளின் உணர்வுகளை உதாசீனப்படுத்துவதால் ஏற்படும் தீங்கிலிருந்து இரட்சிப்பு கிடைக்கின்றது. மேலும், ஜமாஅத் உறுப்பினர்கள் அனைவரும் மத்தாப்பு கொளுத்துங்கள் என்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறவில்லை.

(மஜ்லிஸே முஷாவரத்தின் அறிக்கை 7-9 ஏப்ரல் 1939 வரை, பக்கம் 74-75)

மாறாக, இவற்றை குழந்தைகள் எப்போதாவது செய்தால் தவறில்லை என்று கூறியுள்ளார்கள். சுற்றுப்புறம் தூய்மையாக வேண்டும் என்ற எண்ணத்தில் செய்யப்பட்டால் பின்னர் இரண்டு விஷயங்கள் நடக்கின்றன. குழந்தைகளும் மனமகிழ்வர். சுற்றுப்புறமும் தூய்மையாகி விடும். குழந்தைகள் கொஞ்சம் மகிழ்ச்சி அடைகின்றனர் என்றால் ஒரு தவறும் இல்லை. அவர்களின் உணர்வுகளைப் புறந்தள்ளக் கூடாது. குழந்தைகளுக்கு இந்த உணர்வையும் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். ஓடிக்குதித்து விளையாடும் பருவத்தில் அவர்களின் நியாயமான விருப்பங்களை இஸ்லாம் முற்றிலும் ரத்து செய்யவில்லை. உதாரணமாக, விளக்கேற்றுவது உள்ளது அல்லது மத்தாப்பு கொளுத்துவது போன்றவை உள்ளன. இவை அனைத்தும் எங்கு அவர்களின் தேசத்தின் ஒட்டுமொத்த கொண்டாட்டங்களில் அவர்களைப் பங்கு பெறச் செய்கிறதோ அங்கு தேசத்துடன் அவர்களுக்கு இருக்கும் தொடர்பையும் அது வெளிப்படுத்துகின்றது. அதன் மூலம் குழந்தைகளும் மகிழ்ச்சி அடைகின்றனர். எனவே, இடம் பொருள் ஏவலுக்கேற்ப நடுநிலையைப் பேணியவாறு மகிழ்ச்சியைக் கொண்டாடுவதில் எந்தத் தவறும் இல்லை. ஆனால், குழந்தைப் பருவத்திலேயே இதனை தெளிவுபடுத்தி விட வேண்டும். அதாவது இஸ்லாமிய போதனைகள் மற்றும் நாட்டின் சட்டதிட்டங்களின் வரையறைக்குட்பட்டே நாம் இதனை செய்கின்றோம் என்பதை அவர்களுக்கு கூறி விட வேண்டும்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் தமது குழந்தைப் பருவத்தில் இரண்டு சம்பவங்களைக் குறிப்பிட்டவாறு கூறுகின்றார்கள்:

"எனக்கு எப்போதும் நினைவு உள்ளது. நான் சிறிய வயதுடைய பிள்ளையாக இருந்தேன். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஒருமுறை முல்தான் சென்றார்கள். நானும் அன்னாருடன் இருந்தேன். அப்போது எனது வயது 7 அல்லது 8 இருக்கும். அந்தப் பயணத்தில் இரண்டு சம்பவங்கள் எனக்கு நினைவு உள்ளது. எனக்கு 2 வயது இருக்கும் போது நிகழ்ந்த சம்பவங்கள் கூட நினைவில் உள்ளது. இன்னும் சொல்லப்போனால், நண்பர் ஒருவர் எனக்கு ஒரு வயதாக இருக்கும் போது நிகழ்ந்த சம்பவத்தை எனக்கு நினைவூட்டினார். எனக்கு அதுவும் நினைவிற்கு வந்து விட்டது."

ஆக, அன்னார் கூறுகின்றார்கள்: "சிறிய வயதின் சில சம்பவங்கள் எனக்கு நினைவிருக்கின்றன. இப்போது எனது நினைவில் இந்தப் பயணத்தின் இரண்டு சம்பவங்கள் மட்டுமே உள்ளன. முதல் விஷயம் என்னவென்றால், வீடு திரும்பும் போது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் லாஹூரில் தங்கினார்கள். அங்கு அந்த நாட்களில் மெழுகு சிலை கண்காட்சி நடைபெற்றது. பிள்ளை பிடிவாதம் பிடித்திருந்தாலும் அவர்கள் ஒருபோதும் அங்கு சென்றிருக்க மாட்டார்கள். எனவே, அது ஒரு அறிவுசார்ந்த விஷயமாக இருந்ததால் மட்டுமே அன்னார் தனது பிள்ளையை அழைத்துக் கொண்டு அங்கு சென்றார்கள்.

எனக்கு நினைவிலுள்ள இரண்டாவது சம்பவம் இதுவாகும்: ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை லாஹூரில் ஒரு நண்பர் விருந்திற்கு அழைத்திருந்தார். அன்னார் அதில் கலந்து கொள்ளச் சென்று விட்டார்கள். நான் புரிந்த வரை அது விருந்து மட்டுமல்ல. ஹஸ்ரத் முஃப்தி முஹம்மது ஸாதிக் ஸாஹிப் அல்லது அவர்களது பிள்ளை உடல் நலமின்றி இருந்தார்கள். அவர்களைக் காணவும் சென்றிருந்தார்கள். நகரத்திலிருந்து ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் திரும்பி வந்து கொண்டிருந்தார்கள். Golden Mosque என்று அழைக்கப்படும் பள்ளிவாயிலுக்கு அருகில் பெரிய கூட்டம் ஒன்று கூடி இருந்தது. அது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை ஏசிப் பேசியது. அவர்களுக்கு நடுவில் ஒரு நபர் நின்றிருந்தார். ஒருவேளை அவர் மவ்லவியாகக் கூட இருந்திருக்கலாம். ஏனென்றால், அவர்களுக்கு பொருத்தமற்ற இடத்தில் சவால் விடுவது அவர்களின் இயல்பாகும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் வண்டி அந்தக் கூட்டத்தைக் கடந்த போது ஏதோ திருவிழாக் கூட்டம் என நினைத்து வண்டியிலிருந்து எனது தலையை வெளியே நீட்டினேன். அன்று நடந்த சம்பவத்தை இன்று வரை நான் மறக்கவில்லை. ஒரு நபரின் கை வெட்டப்பட்டிருந்தது. அதில் மஞ்சள் தடவப்பட்ட கட்டு போடப்பட்டிருந்தது. அந்த நபர் மிகவும் உணர்வுடன் வெட்டப்பட்ட தனது கையை தனது மற்றகையில் அடித்தவாறு மிர்ஸா ஓடி விட்டார்; மிர்ஸா ஓடி விட்டார் என்று கூறிக் கொண்டிருந்தார். இந்தச் சம்பவத்தை இதற்கு முன்னரும் நான் எடுத்துக் கூறியுள்ளேன்.

ஆனால், இங்கு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: "பாருங்கள் ஒரு நபர் காயமடைந்துள்ளார். அவரது கையில் கட்டு போடப்பட்டுள்ளது. ஆனால், தனது எதிர்ப்பின் வேகத்தில், நான் எனது வெட்டப்பட்டக் கையாலேயே அஹ்மதிய்யத்தை அழித்து விடுவேன் அல்லது அஹ்மதிய்யத்தைப் புதைத்து விடுவேன் என்று அவர் கருதுதுகின்றார். இது எந்த அளவு அபாயகரமான பகைமையாக இருக்கின்றது. மக்களது உள்ளங்களில் அது இருந்தது. மக்கள் காதியான் வரக் கூடாது. அஹ்மதிய்யத்தை ஏற்று கொள்ளக் கூடாது என்பதற்காக எந்த அளவு அவர்கள் வலுவாக செயல்பட்டனர்? அத்தகைய பல அஹ்மதிகளும் இருந்தனர். அவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் (அலை) அவர்களின் காலத்தில் காதியான் வர வேண்டும் என்ற எண்ணத்தில் பட்டாலா வரை வந்ததும் மவ்லவி முஹம்மது ஹுஸைன் பட்டாலவி அவர்கள், அவர்களை அங்கிருந்து திரும்ப அனுப்பி வைத்து விடுவார்."

அன்னார் கூறுகின்றார்கள்: "பாகல்பூரைச் சார்ந்த மவ்லவி அப்துல் மாஜித் ஸாஹிப் அவர்களும் ஆரம்பத்தில் இதன் காரணமாகவே அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொள்ளாமல் இருந்து விட்டார்கள். அன்னார் பட்டாலா வந்தடைந்த போது அன்னாரைத் தூண்டி விட்டு முஹம்மது ஹுஸைன் பட்டாலவி திருப்பி அனுப்பி வைத்து விட்டார். முஹம்மது ஹுஸைன் பட்டாலவியின் அன்றாட வேலை இதுவாகவே இருந்தது. தினமும் பட்டாலா இரயில் நிலையம் சென்று, காதியான் செல்லவிருந்த மக்களிடம், நீங்கள் காதியானிற்குச் சென்று என்ன பெற்றுக் கொள்ளப் போகின்றீர்கள்? நீங்கள் அங்கு சென்றால் உங்கள் ஈமான் வீணாகி விடும் என்று கூறி வந்தார். பல மக்கள் அவரை ஆலிம் என நம்பி திரும்பிச் சென்று விடுவர். மவ்லவி முஹம்மது ஹுஸைன் ஸாஹிப் என்ன கூறுகிறாரோ அது உண்மையாகவே இருக்கும் என நம்பி திரும்பிச் சென்றனர்." (அல்ஃபஸ்ல் 24 ஜனவரி 1943, பக்கம் 3, தொகுதி 31, இதழ் 21) இவை அனைத்தும் மவ்லவிகளின் எதிர்ப்பால் நிகழ்ந்தது. அவர்கள் பொதுமக்களிடம் எந்த அளவுக்கு எதிர்ப்பை பரப்பி இருந்தனர் என்றால், அதன் காரணமாகவே துண்டிக்கப்பட்ட கையைக் கொண்ட மனிதன் கூட முழக்கமிட்டுக் கொண்டிருந்தான்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு எதிரான இந்த எதிர்ப்புகள் அனைத்தும் ஆலிம்களின் அறிவீனம் மற்றும் சுயநலத்தின் காரணமாகவே இருந்தது. ஆனால் அவர்கள் மக்களை மார்க்கத்தின் பெயரால் தூண்டி விட்டு தமது நோக்கங்களை நிறைவேற்றிக் கொண்டனர். எந்த விஷயத்தை எதிர்ப்பின் காரணியாக இன்று வரை இந்த ஆலிம்கள் பயன்படுத்துகின்றார்களோ, அதனை நிலைநாட்டவே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தோன்றியுள்ளார்கள். அதாவது, இஸ்லாத்தின் உண்மையான போதனையை மக்களுக்கு எடுத்துக் கூறி ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் கத்மே நுபுவ்வத்தின் அந்தஸ்தை மக்களிடம் நிலைபெறச் செய்வதற்காகவே அன்னார் தோன்றினார்கள். அன்னார் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் உண்மைப் பேரன்பராகவும் உண்மை அடியாராகவும் இருந்தார்கள். இப்போது உலகிற்கு இரட்சிப்பு என்பது காத்தமுல் அன்பியா ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்கள் மூலமாக மட்டுமே கிடைக்க முடியும் என்பதை எடுத்துத் கூறவே அன்னார் தோன்றினார்கள். ஆனால், இது இந்தப் பெயர் தாங்கி ஆலிம்களின் துர்பாக்கியம் ஆகும். அவர்கள் அன்னாரின் உண்மைப் பேரன்பரை ஏற்றுக் கொண்டு அன்னாருக்கு உதவி செய்வதற்கு பதிலாக நவூதுபில்லாஹ் அன்னார் கத்மே நுவுவ்வத்தை நிராகரிக்கக் கூடியவர் எனவும், தன்னை அவர்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை விட உயர்வானவராகக் கருதுவதாகவும் அன்னார் மீது பழிசுமத்துகின்றனர். ஆனால், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் செயலிற்கும், போதனைக்கும் அந்த குற்றச்சாட்டுடன் எந்த சம்பந்தமும் இல்லை. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அனைத்து மார்க்கத்தினருக்கும் சவால் விடுத்தார்கள். இன்று, இஸ்லாத்தை ஏற்றுக் கொள்வதன் மூலமும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களைப் பின்பற்றுவதன் மூலமும் மட்டுமே உலகம் இரட்சிப்புப் பெற முடியும் என அன்னார் கூறினார்கள்.

எவ்வாறிருப்பினும், இந்த ஆலிம்கள் எவ்வளவோ முயற்சி செய்தார்கள். ஆனால், ஜமாஅத் முன்னேறிக் கொண்டே இருந்தது. இப்போதும் முயற்சி செய்யட்டும்! இனியும் முயற்சி செய்வார்கள். ஆனால் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் உண்மைப் பேரன்பரின் ஜமாஅத் முன்னேறும். முன்னேறிக் கொண்டே செல்லும். இது இறை நியதியாகும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் விரும்புகிற உண்மையான மாற்றத்தை நாம், நம்மிடம் உருவாக்கும் நற்பேற்றை அல்லாஹ் நமக்கு வழங்குவானாக! மேலும் உண்மையான முஸ்லிம்களின் முன்னுதாரணமாக நாம் திகழ்வோமாக! நாம் நமது எண்ணங்களிலும் சிந்தனைகளிலும் தெளிவை உருவாக்க வேண்டும். மேலும் நமது உள்ளங்களையும் தக்வாவால் நாம் நிரப்ப வேண்டும். அல்லாஹ் அதற்கான நற்பேற்றினை வழங்குவானாக!

ஜுமுஆவிற்குப் பிறகு இன்று நான் ஒரு ஜனாஸா காயிப் தொழுகையைத் தொழ வைப்பேன். அது மதிப்பிற்குரிய அதாவுர் ரஹ்மான் ஸாஹிப் அவர்களின் மனைவி மதிப்பிற்குரிய அமத்துல் ஹஃபீழ் ரஹ்மான் ஸாஹிபா அவர்கள் உடையதாகும். 2016 ஏப்ரல் 15 –ஆம் தேதி அன்று அன்னாரின் மரணம் நிகழ்ந்தது. إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُونَ

அன்னார் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் ஸஹாபியான மியான் அஸீமுல்லாஹ் ஸாஹிப் அவர்களின் மருமகள் ஆவார். மேலும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் மற்றொரு ஸஹாபியான ஹஸ்ரத் ஷேக்

(தொடர்ச்சி கடைசிப் பக்கம்)

# கிலாஃபத்தின் தேவை மற்றும் அதன் முக்கியத்துவம்

**மதிப்பிற்குரிய மவ்லானா குலாம் நபி சாஹிப் நியாஸ், காஷ்மீர் மாநிலப் பொறுப்புப் பிரச்சாரகர்**

(சென்ற இதழின் தொடர்ச்சி...)

பெருமானார் (ஸல்) அவர்கள் தமது சமுதாயத்தின் சீர்திருத்தத்திற்காக இவ்வாறும் முன்னறிவிப்பு செய்திருந்தார்கள்:

اِنَّ اللّٰهَ عَزَّوَجَلَّ يَبۡعَثُ لِهٰذِهِ الاُمَّةِ عَلٰى رَاۡسِ كُلِّ مِائَةِ سَنَةٍ مَنۡ يُّجَدِّدُ لَهَا دِيۡنَهَا

நிச்சயமாக அல்லாஹ், இந்த உம்மத்திற்காக ஒவ்வொரு நூற்றாண்டின் ஆரம்பத்திலும் மார்க்கத்தைப் புதுப்பிக்கின்ற அத்தகைய மக்களை உருவாக்கிக் கொண்டே இருப்பான். (அபூதாவூது. மிஷ்காத், பக்கம் 36)

எனவே, முற்றிலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முன்னறிவிப்பிற்கேற்ப முஸ்லிம் சமுதாயத்தைச் சீர்திருத்துவதற்காக பதிமூன்று நூற்றாண்டுகள் வரை சீர்திருத்தவாதிகளின் காலக்கட்டம் தொடர்ந்து இருந்து வந்தது. பதினான்காவது நூற்றாண்டில் இமாம் மஹ்தியின் வருகை விதிக்கப்பட்டிருந்தது. அவர்கள் சரியான நேரத்தில் வந்தார்கள். அவர்களது மரணத்திற்குப் பிறகு மீண்டும் நபித்துவ வழியிலான கிலாஃபத்தின் காலக்கட்டம் தொடர்ந்து இருந்து வருகிறது. இதன் தொடர் மறுமை நாள் வரை நீடிக்கும் - இன்ஷா அல்லாஹ்.

எனினும், அல்லாஹ் கிலாஃபத்தே ராஷிதா (நேர்வழி பெற்ற கிலாஃபத்) நிரந்தரமாக நிலைத்திருக்கும் என்ற வாக்குறுதியை நற்செயல்கள் செய்வதை நிபந்தனையாக வைத்து நம்பிக்கை கொண்டவர்களுக்குத் தந்துள்ளான். பொருத்தமான நற்செயல்கள் இல்லாமல் இருக்கும்போது கிலாஃபத் என்ற அருட்கொடையில் இருந்து முஸ்லிம் சமுதாயம் விலக்கி வைக்கப்பட்டு விடும் என்பதே இதன் தெளிவான கருத்தாகும். கிலாஃபத்தே ராஷிதாவின் முதல் காலக்கட்டத்திற்குப் பிறகு இவ்வாறே நடந்தது. இப்போது அல்லாஹ், எப்போதும் நமக்கு கிலாஃபத் என்ற அருட்கொடையை வழங்கி நிரந்தரமாக அதை நம்மிடம் நிலைத்திருக்கும்படி செய்வானாக!

### கிலாஃபத்தின் முதல் காலக்கட்டம் மற்றும் இரண்டாவது காலக்கட்டம் பற்றிய உள்ளத்தை ஈர்க்கக் கூடிய உதாரணம்:

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "எனது சமுதாயத்திற்கான உதாரணம் மழையைப் போனறதாகும். அது தொடர்பாக, அதன் இறுதிப் பகுதி மிகவும் பயனுள்ளதாகவும், நன்மைக்குக் காரணமாகவும் இருக்குமா? அல்லது அதன் முதல் பகுதி அவ்வாறிருக்குமா? என்று எனக்கு தெரியாது."

இந்த நபிமொழியின் இறுதியில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: "ஆரம்பத்தில் நானும், இறுதியில் வாக்களிக்கப்பட்ட மஸீஹுூம் இருக்கும்போது எனது உம்மத் எவ்வாறு அழிந்து போக முடியும்?"

பெருமானார் (ஸல்) அவர்கள் இறுதிக் காலத்தைப் பற்றி இவ்வாறு கூறினார்கள்: "அதாவது இந்த உம்மத்தின் இறுதிப் பகுதியில் ஒரு ஜமாஅத் இருக்கும். அவர்களுக்கு நபித்தோழர்களைப் போன்று நற்கூலி கிடைக்கும். அது நன்மையை ஏவக்கூடியதாகவும் தீமையில் இருந்து தடுக்கக் கூடியதாகவும் இருக்கும். இந்த ஜமாஅத்தில் உள்ள மக்கள் அனைத்து குழப்பவாதிகளையும் எதிர்த்து நின்று அவர்களை தோல்வியடையச் செய்வர்." (மிஷ்காத்துல் மஸாபீஹ், பக்கம் 485)

நபிமொழியில் குறிப்பிடப்பட்டுள்ள ஜமாஅத் வாக்களிக்கப்பட்ட மஸீஹின் ஜமாஅத்தே ஆகும் என்பது தெளிவாகத் தெரிகின்றது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் இந்த ஜமாஅத் தொடர்பாக, அதற்கு இந்த அருள் கிடைக்கும் என்று கூறியுள்ளார்கள். அதற்கு நபித்துவ வழியிலுள்ள கிலாஃபத் என்ற பெயர் தரப்பட்டிருக்கின்றது.

ஹஸ்ரத் ஹுதைஃபா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: "அல்லாஹ் நாடும் வரை உங்களிடம் எனது நுபுவ்வத் இருக்கும். பிறகு இறைவன் அதை எடுத்து விடுவான். பிறகு அல்லாஹ் நாடும் வரை நபித்துவ வழியிலான கிலாஃபத் ஏற்படும். பிறகு அல்லாஹ் அதை எடுத்து விடுவான். பிறகு அல்லாஹ் நாடும் வரை கொடுங்கோல் அரசாட்சி இருக்கும். பிறகு இறைவன் நாடும் வரை பலாத்கரமான ஆட்சி இருக்கும். பிறகு இறைவன் அதையும் எடுத்து விடுவான். அதற்குப் பிறகு நபித்துவ வழியிலான கிலாஃபத் ஏற்படும். இதற்கு பிறகு பெருமானார் (ஸல்) அவர்கள் அமைதியாக இருந்தார்கள்."

மேற்கண்ட நபிமொழியிலிருந்து நபித்துவ வழியிலான கிலாஃபத்தின் இரு காலக்கட்டம் இருக்கும் என்று தெளிவாகத் தெரிகின்றது. ஒன்று, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மறைவிற்குப் பிறகு தோன்றும் கிலாஃபத் ஆகும். இரண்டாவது, கிலாஃபத்தின் காலக்கட்டம் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் மறைவிற்குப் பிறகு ஆரம்பமாகும். ஹதீஸ் விரிவுரை -யாளர்களும் இதே கருத்தை எழுதியுள்ளனர்.

اَلظَّاهِرُ اَنَّ الْمُرَادَ بِهٖ زَمَنُ عِيۡسٰى وَالْمَهۡدِيِّ

அதாவது, மேற்கண்ட நபிமொழியின் இறுதியில் "நபித்துவ வழியில் கிலாஃபத்" என்பதன் கருத்து வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் மஹ்தியின் காலமாகும் என்று அவர்கள் எழுதியுள்ளனர். "நபித்துவ வழியில் கிலாஃபத் ஏற்படும்" என்ற கூறிய பிறகு பெருமானார் (ஸல்) அவர்கள் அமைதியாக இருந்தார்கள். இதிலிருந்தும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்குப் பிறகு கிலாஃபத்தின் காலக்கட்டம் மறுமைநாள் வரை நீடித்திருக்கும் என்பது தெளிவாகத் தெரிகின்றது.

### வாக்களிக்கப்பட்ட மஸீஹின் வருகையும் கிலாஃபத்தின் தோற்றமும்:

இறை வேதங்களில் குறிப்பிட்டிருப்பதற்கு ஏற்பவும் முன்னறிவிப்புகளுக்கு ஏற்பவும் சரியான நேரத்தில் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மத் (அலை) அவர்களை அல்லாஹ் காதியானின் புனித ஊரில் அனுப்பி வைத்தான். அவர்கள் ஹிஜ்ரி 1290-ல் இறைவனுடன் உரையாடும் நற்பேற்றைப் பெற்றார்கள். 1885 -ஆம் ஆண்டு தாமே இக்காலத்தின் சீர்திருத்தவாதி என்று அவர்கள் வாதம் செய்தார்கள். 1890-ஆம் ஆண்டின் இறுதியில் நானே வாக்களிக்கப்பட்ட மஸீஹாக இருக்கின்றேன் என்று அன்னார் அறிவிப்பு செய்தார்கள். 1908 -ஆம் ஆண்டு மே மாதம் 26 -ஆம் தேதி அன்னார் மரணமடைந்தார்கள். இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிவூன். அன்னாரது மரணத்திற்குப் பிறகு உடனடியாக அவர்கள் செய்திருந்த வஸிய்யத்திற்கேற்ப கிலாஃபத்திற்கான தேர்தல் நடைபெற்றது. பிறகு, ஜமாஅத் ஹஸ்ரத் மவ்லானா நூருத்தீன் (ரலி) அவர்களின் அருளுக்குரிய கையில் பைஅத் செய்து இறைவனின் இரண்டாவது வல்லமையின் தோற்றமாக திகழ்ந்தது.

فالحمدلله على احسانه وفضله وكرمه

கிலாஃபத் நிரந்தரமாக நிலைத்திருக்கும் என்ற நற்செய்தியை ஜமாஅத்திற்கு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தமது மரணத்திற்கு முன்னதாகவே வழங்கியிருந்தார்கள். 24 டிசம்பர் 1905 -ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட 'அல் வஸிய்யத்' என்ற நூலில் இறைவனின் இரண்டாவது வல்லமையின் தோற்றம் என்பது கிலாஃபத்தான் என்பதை எவ்வித சந்தேகத்திற்கும் இடமின்றி மிகவும் தெளிவான சொற்களில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறினார்கள். "அப்போது இறைவன் ஹஸ்ரத் அபூபக்கர் ஸித்தீக் (ரலி) அவர்களை நிற்கச் செய்து மீண்டும் தனது வல்லமையின் முன்மாதிரியைக் காட்டினான். மேலும் அழிந்து போகக்கூடிய நிலையிருந்த இஸ்லாத்தை அதிலிருந்து காப்பாற்றினான்." (அல் வஸிய்யத்)

இறைவனின் வாக்குறுதிக்கேற்ப ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் மறைவிற்குப் பிறகு முதலில் குறிப்பிட்டிருந்தபடி ஹஸ்ரத் மவ்லானா நூருத்தீன் (ரலி) அவர்கள் இறைவனின் இரண்டாவது வல்லமையின் முதல் தோற்றமாக அதாவது வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் முதல் கலீஃபாவாக தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். வீழ்ந்து கிடந்த ஜமாஅத்தை அன்னார் எழுச்சி பெறச் செய்தார்கள். உட்புற குழப்பங்களை அன்னார் கடுமையாகத் தடுத்து நிறுத்தினார்கள். உட்புற மற்றும் வெளிப்புற குழப்பங்களிலிருந்து அதாவது இந்த இரு மட்டத்திலும் ஜமாஅத்தை அன்னார் வலிமையுடனும், உறுதியுடனும், ஒற்றுமையுடனும் இருக்கச் செய்தார்கள். அவர்கள் ஜமாஅத்தை நோக்கி இவ்வாறு கூறினார்கள்: "நீங்கள் இப்போது பாருங்கள். ஏனென்றால், இதுவே உங்களுக்கு அருளுக்குரிய வழியாகும். நீங்கள் இந்த அல்லாஹ்வின் கயிற்றை (அதாவது கிலாஃபத்தின் அருளை) வலுவாகப் பற்றிப்பிடித்துக் கொள்ளுங்கள். இதுவும் அல்லாஹ்வின் கயிறே ஆகும். அது உங்களது பல்வேறு

பகுதிகளை ஒன்று திரட்டி விட்டது. எனவே, அதை வலுவாகப் பற்றிப்பிடித்துக் கொள்ளுங்கள்.'' *(பதர். 1 பிப்ரவரி 1912)*

*அன்னார் 1914 -ஆம் ஆண்டு மார்ச் மாதம் 3 -ஆம் தேதி தனது உண்மையான எஜமானரிடம் சென்று சேர்ந்தார்கள். இன்னா லில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன். இறைவனின் இரண்டாவது வல்லமையின் இரண்டாவது தோற்றமான ஹஸ்ரத் மிர்ஸா பஷீருத்தின் மஹ்மூது அஹ்மது சாஹிப் அவர்கள் 4 மார்ச் 1914 அன்று கலீஃபாவாக தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். தமது 52 வருட கால வெற்றிகரமான நீண்ட கிலாஃபத்திற்குப் பிறகு அன்னார் 1965 -ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 7 மற்றும் 8 ஆம் தேதிக்கு இடைப்பட்ட இரவில் வஃபாத் ஆனார்கள். அல்லாஹ் அவர்களின் பதவிகளை உயர்த்துவானாக!*

*1965 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 9 ஆம் தேதி இறைவனின் இரண்டாவது வல்லமையின் மூன்றாவது தோற்றமான ஹஸ்ரத் ஹாஃபிஸ் மிர்ஸா நாஸிர் அஹ்மது சாஹிப் அவர்கள் கிலாஃபத்தின் அரியணையில் அமர்ந்தார்கள். அவர்கள் 1982 -ஆம் ஆண்டு ஜுன் மாதம் 8 மற்றும் 9 தேதிகளின் இடைப்பட்ட இரவில் மரணம் அடைந்தார்கள். அல்லாஹ் அவர்களிடம் திருப்தி அடைவானாக!*

*1982 -ஆம் ஆண்டு ஜுன் மாதம் 10 -ஆம் தேதி அன்று ஹஸ்ரத் மிர்ஸா தாஹிர் அஹ்மது சாஹிப் அவர்கள் இறைவனின் இரண்டாவது வல்லமையின் நான்காவது தோற்றமாகத் திகழ்ந்தார்கள். அன்னார் தமது எழுச்சிமிகு கிலாஃபத் காலக் கட்டத்தை நிறைவு செய்தவாறு 2003 -ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 19 -ஆம் தேதி அன்று காலமானார்கள்.* اللهم ارحمه واغفرله وادخله الجنة

**இறைவனின் இரண்டாவது வல்லமையின்**
**ஐந்தாவது தோற்றம்:**

இறைவனின் இரண்டாவது வல்லமையின் ஐந்தாவது தோற்றமாகிய ஸய்யிதுனா ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது சாஹிப் அவர்கள் 2003 -ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 22 -ஆம் தேதி கலீஃபாவாக தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

اللهم متعنا بطول حياتهم وايدهم بنصرك العزيز

*அல்லாஹ்வே! அவர்களது நீண்ட ஆயுளின் மூலமாக எங்களுக்கு பலனளிப்பாயாக! உமது வெற்றியின் உதவியைக் கொண்டு அவர்களுக்கு உதவி செய்வாயாக! கிலாஃபத்தின் நிழலின் கீழ் அஹ்மதிய்யா ஜமாஅத் இஸ்லாத்தைப் பரப்புகின்ற முக்கியமான பணியைச் செய்து வருகின்றது. அல்லாஹ் இஸ்லாத்திற்கு அசாதாரணமான பெரும் மகத்துவத்தை வழங்கி வருகின்றான்.*

ஒரு கிறித்தவ எழுத்தாளர் ஹெர்பர்ட் கோன்ஸ் ஷாரிக் தனது *Well Bewegendi Machti Islam* என்ற தனது நூலில் இவ்வாறு எழுதுகின்றார்:

''முஹம்மது (ஸல்) அவர்கள் மூலமாக அரபு நாட்டிலுள்ள கோத்திரங்கள் ஒன்றாக இணைந்து விட்டான. அப்போதுதான் உலகில் முதன்முறையாக இஸ்லாமிய உலகளாவிய சகோதரத்துவம் தோன்றியது. ஒன்பதாவது நூற்றாண்டில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் உலகை வெற்றி கொள்வதற்கான நடவடிக்கைகளை ஆரம்பித்தார்கள். அவர்களது ஆற்றலின் கடுமையான அழுத்தமானது சிலுவைப் போர்களின் வடிவிலும் வெளிப்பட்டது. இன்று இஸ்லாம் தனது கொள்கைகளைப் பரப்புவதற்காக வாளைப் பயன்படுத்தவில்லை. புனிதப் போரை இப்போது ஏனைய வல்லரசின் சக்திகளே பயன்படுத்துகின்றன. ஆனால், அமைதியை விரும்புகின்ற அஹ்மதிய்யா ஜமாஅத் உலகிலுள்ள ஏறக்குறைய எல்லா நாடுகளிலும் தப்லீக் பணிகளில் ஈடுபட்டு வருகின்றது.'' *(சாஹிப் ஸாதா மிர்ஸா முபாரக் அஹ்மது சாஹிப் அவர்கள் 1967 -ஆம் ஆண்டு நடைபெற்ற ஆண்டு மாநாட்டில் நிகழ்த்திய சொற்பொழிவு)*

கிறித்தவ எழுத்தாளர் ஹெர்பர்ட் கோன்ஸ் ஷாரிக் அவர்கள் *Well Bewegendi Machti Islam* என்ற தமது நூலில் தொடர்ந்து இவ்வாறு எழுதுகின்றார்:

''நவீன இஸ்லாமின் இந்தக் கிளை சிறப்பான முக்கியத்துவத்தைப் பெற்றுத் திகழ்கின்றது. ஏனென்றால், இப்போது இது கிறித்தவ உலகில் வேரூன்றி வருகிறது. இந்த ஜமாஅத் மட்டுமே கிறித்தவர்களை இஸ்லாத்தின் வட்டத்திற்குள் இழுத்துக் கொண்டு வருவதற்காக வலுவாக தப்லீக் செய்து வருகின்றது. நாம் இதற்கு முன்னதாக முஸ்லிம்களுக்கிடையில் கிறித்தவர்கள் செய்கின்ற தப்லீகில் ஏற்படுகின்ற கஷ்டங்களைப் பற்றி குறிப்பிட்டிருந்தோம். இப்போது இந்த ஜமாஅத்தின் தப்லீக் முயற்சியின் இலக்கு கிறிஸ்தவர்களாகத் தான் உள்ளனர். இந்த ஜமாஅத் ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும், ஆப்பிரிக்காவிலும், ஆசியாவிலும், ஆஸ்திரேலியாவிலும் உள்ள ஏறக்குறைய எல்லாப் பெரிய நகரங்களிலும் தனது பிரச்சார நிலையங்களை நிறுவியுள்ளது. அதன் மூலமாக கிறித்தவ உலகில் அதன் வளர்ச்சியில் ஒரு தடையை அது எந்த அளவு சிறியதாக இருந்தாலும் கூட அதை இந்த ஜமாஅத் ஏற்படுத்தி விட்டது. இந்த ஜமாஅத் சிறந்த தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய பிரச்சாரத்தைச் செய்கின்ற அமைப்பைக் கொண்டதாகும். சொற்பொழிவுகள் நிகழ்த்தப்படுகின்றன. பத்திரிகைகள் வெளியிடப்படுகின்றன. தங்களது எண்ணங்களைப் பரப்புவதற்கு வானொலியும் பயன்படுத்தப்படுகின்றது. *(சாஹிப் ஸாதா மர்ஹூம் மிர்ஸா முபாரக் அஹ்மது சாஹிப் அவர்கள் 1967 -ஆம் ஆண்டில் காதியானில் நடைபெற்ற ஆண்டு மாநாட்டில் நிகழ்த்திய சொற்பொழிவிலிருந்து)*

இப்போது வானொலியைத் தவிர ஜமாஅத்திற்கு முஸ்லிம் தொலைக்காட்சி அஹ்மதிய்யா (M.T.A) என்ற பெயரில் ஒரு வலுவான தொலைக்காட்சி சேனலை நிறுவுவதற்கான நல்வாய்ப்பு கிடைத்திருப்பது கூட கிலாஃபத்தின் அருளேயாகும். இந்தச் சேனல் மூலமாக 24 மணி நேரமும் ஏக இறைவனின் மகத்துவம், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மை மற்றும் அன்னாரது நபித்துவத்தின் உண்மை ஆகியவை வெளிப்படுகின்றது. இனியும் வெளிப்பட்டுக் கொண்டிருக்கும் - இன்ஷா அல்லாஹ். மேலும் இஸ்லாம் மற்றும் அஹ்மதிய்யத்தின் உண்மையான கிலாஃபத்தின் இந்த இரண்டாவது காலக்கட்டத்தில் இஸ்லாம் வெற்றி பெற்றே தீரும். இப்போது உலகில் எந்த சக்தியாலும் இறைவனின் இந்த நியதியைத் தடுத்து நிறுத்த முடியாது. அஹ்மதிய்யா ஜமாஅத்தை அழிப்பதற்காக மவ்லவிமார்கள் மட்டுமல்லாமல் அரசாங்கங்களும் தமது கருவூலங்களின் வாயைத் திறந்து வைத்தன என்பதற்கு வானமும், பூமியும், அஹ்மதிய்யத்தின் உலகமும் சாட்சியாக இருக்கின்றது. ஆனால், அல்லாஹ்வின் விதியானது இவர்கள் அனைவரையும் தோல்வி அடையச் செய்தது. 1908, 1914, 1924, 1939, 1953, 1965, 1974, 1982, 1984 ஆகிய வருடங்களில் ஏற்பட்ட கடுமையான சோதனை நிறைந்த நிலைமைகளில் அவற்றை சரி செய்து அபாயகரமான புயல் வீசியபோது அவற்றை அமைதியான நிலைமையில் மாற்றியவன் நமது உண்மையான எஜமானனாகிய இறைவனே ஆவான். அவனே எப்போதும் ஜமாஅத்தைக் கண்காணித்து வந்தான். எதிர்காலத்திலும் அவனே இந்த ஜமாஅத்தைக் கண்காணித்து வருவான். இவ்வாறு நடக்க வேண்டியது கட்டாயமானதாகும். இந்த மார்க்கம் முழு உலகிலும் பரவி அது வெற்றி பெற வேண்டும் என்று இஸ்லாத்தின் இறைவன் தீர்மானித்து விட்டான்.

எனது பார்வையில் ஹஸ்ரத் ஸய்யிது முஹம்மது இஸ்மாயில் சாஹிப் ஷஹீது அவர்களின் இந்தக் கூற்று இருக்கின்றது. அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்: ''மார்க்கத்தின் வெளிப்பாட்டின் தொடக்கம் இறைத் தூதர் பெருமானார் (ஸல்) அவர்களின் காலத்தில் ஆரம்பமானது. அது ஹஸ்ரத் மஹ்தி (அலை) அவர்களின் கைகளால் நிறைவடையும்.'' *(மன்ஸபே இமாமத் பக்கம் 76)*

எனவே, இன்றைய காலக்கட்டம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மைப் பேரன்பரும் அன்னாரது அடியாருமாகிய மஹ்தி (அலை) அவர்களின் காலக்கட்டமாகும். இப்போது வாக்களிக்கப்பட்ட மஹ்தி (அலை) அவர்களின் ஐந்தாவது கலீஃபா கிலாஃபத்தின் சிம்மாசனத்தில் அதன் வாரிசாக அமர்ந்திருக்கின்றார்கள். இஸ்லாத்தின் கலிமாவை உயர்த்துவதற்கும் மக்களை அதன் பக்கம் அழைப்பதற்கும் அதற்கான பணிகளில் இரவு பகலாக அன்னார் ஈடுபட்டு வருகின்றார்கள். அல்லாஹ் அவர்களின் ஆயுளிலும் உடல் நலத்திலும் பரக்கத்தை வழங்குவானாக! இந்தக் காலக்கட்டம் இஸ்லாம் முழுமையடையும் காலக்கட்டமாகும். இந்த அமைப்புடன் இணைந்து மார்க்கத்திற்குத் தொண்டாற்றுவதில் முனைப்புடன் செயல்படுகின்ற அந்த முஸ்லிம்கள் நற்பாக்கியம் பெற்றவர்களாவர்.

ஹஸ்ரத் மஹ்தி (அலை) அவர்கள் தமது கவிதை ஒன்றில் இவ்வாறு கூறுகின்றார்கள்:

اب اسی گلشن میں لوگو! راحت وآرام ہے
وقت ہے اب جلد آوا ے آوارگان دشت خوار

மக்களே! இப்போது இந்த தோட்டத்தில்தான் (இஸ்லாத்தில் தான்) உங்களுக்கு சுகமும் இன்பமும் கிடைக்கும். காடுகளிலும், மேடுகளிலும் திரிபவர்களே! விரைவில் இதன் பக்கம் வாருங்கள். இதுவே அதற்கான நேரமாக இருக்கின்றது.

EDITOR
MUZZAMMIL AHMAD
Mobile : + 91 99448-03650
SUB EDITOR
RAFEEQ AHMAD
Mobile : + 91 98885-67232
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

Title Code: PUNTAM00001
The Weekly **BADAR** Qadian
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516
பதர் வாரப் பத்திரிகை காதியான்
Vol. 1 Thursday 26 MAY 2016 Issue No. 12

MANAGER
NAWAB AHMAD
Mobile : +91 94170- 20616
Tel. : +91 1872-224757
E-mail : managerbadrqnd@gmail.com
ANNUAL SUBSCRIPTION : Rs.300/-

## இஸ்லாமிய உலகின் அவல நிலையும் கிலாஃபத்தின் முக்கியத்துவமும்

இன்று இஸ்லாமிய உலகிற்கு ஏற்பட்டுள்ள அவல நிலை எவருக்கும் மறைவானதாக இல்லை. இவர்கள் பல்வேறு பிரிவுகளாப் பிரிந்து ஒவ்வொருவரும் தத்தமது கருத்திற்கேற்ப செயல்படுகின்றனர். இதற்காக இறைவன் புறமிருந்து செய்யப்பட்டுள்ள ஏற்பாடுதான் கிலாஃபத் அமைப்பு நிறுவப்பட்டிருப்பதாகும். இந்த இறை அமைப்பின் தேவையையும் அதன் முக்கியத்துவத்தையும் விரும்புகின்றவர்களும், அதன் தேவையை அதிகமாக உணர்கின்ற இஸ்லாமிய சான்றோர்களும், அறிஞர்களும் இன்னும் இருக்கத்தான் செய்கின்றனர்.

இப்போது என் கண்களுக்கு முன்னால் தில்லியிலுள்ள மில்லி பதிப்பகத்தார் வெளியிட்டுள்ள ஒரு நூல் இருக்கின்றது. அதன் 716 - வது பக்கத்தில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது:

“இஸ்லாமிய கொள்கைக்கேற்ப முஸ்லிம்களாக ஆவதற்கு நமது கழுத்துகளில் கலீஃபாவிற்குக் கட்டுப்பட்டு அவருக்கு கீழ்ப்படிந்து நடக்கின்ற பைஅத்தின் உடன்படிக்கை இருக்க வேண்டியது அவசியமானதாகும் என்பது உங்களுக்கு தெரிந்திருக்க வேண்டும். இந்த சமுதாயத்தில் ஒரே நேரத்தில் இரு அமீர்கள் இருக்க முடியாது என்பது அறிவுடையவர்களுக்குத் தெரியும். இந்த சமுதாயம் ஒரு கலீஃபாவின் கண் இமையின் சைகைக்கேற்ப உடனடியாக செயல்படுவதில்தான் சமுதாய ஆற்றலின் தலையூற்று இருக்கின்றது. இன்று, நம்மிடமிருந்து முழு சமுதாயத்தையும் வழி நடத்துகின்ற அத்தகைய ஒரு தலைமையகம் தொலைந்து போய் விட்டது தான் நமக்கு ஏற்பட்டிருக்கும் அவல நிலையாகும். நமது பல கூட்டு முயற்சிகளும் பலன் தராமல் போனதற்குக் காரணம் ஒரு விஷயம் தொடர்பாக நாம் தீர்மானிக்கின்ற அந்த இறுதிக் கட்டத்தில் பல அமீர்களும் பல வழிமுறைகளும் உருவாகுவதை நீங்கள் பார்த்திருப்பீர்கள். சமுதாயத்தை இப்படிப்பட்ட பிரிவினையில் இருந்து கலீஃபாவால் மட்டுமே காப்பாற்ற முடியும். ஏனென்றால், மார்க்க ரீதியாக கலீஃபாவின் கட்டளையைப் பின்பற்றி நடப்பது முஸ்லிம்கள் மீது கடமையாக இருக்கின்றது. திருக்குர்ஆனில் அல்லாஹ்வுக்கும் அவனது தூதர் (ஸல்) அவர்களுக்குப் பிறகு தமது மேலதிகாரிகளுக்கு கட்டுப்பட்டு நடக்கும்படி கட்டளையிடப் -பட்டுள்ளது. எந்த மக்கள் இன்று இந்த சமுதாயத்திலுள்ள சக்தியற்ற நிலையைக் கண்டு மிகவும் நிம்மதியிழந்து காணப்படுகின்றனரோ அவர்கள் உடனடியாக இந்த சமுதாயத்தின் தலைமையகத்தைத் தேடிக் கண்டுபிடிக்க வேண்டும். இது மிகவும் கடினமான உயிரை மாய்த்துக் கொள்ளும் உழைப்பை நம்மிடம் வேண்டுகின்றது. தற்காலத்திலுள்ள நிலைமைகளைப் பார்க்கும்போது ஒருவேளை மிகவும் குறைந்த மக்கள்தான் இதனைச் செயல்படுத்துவதற்குத் தகுதியுள்ள ஒரு விஷயமாகக் கருதுகின்றனர் என்பது தெரிய வருகின்றது. ஆனால், அடிப்படையில் இது மிகவும் ஒரு முக்கியமான பணியாகும். இதிலும் கஷ்டங்களைப் பார்த்து இதற்கு நாம் எல்லாவற்றையும் விட முன்னுரிமை வழங்காமல் இருந்து விட முடியாது.”

பிறகு இதே புத்தகத்தின் 27 மற்றும் 28 ஆம் பக்கத்தில் ‘கிலாஃபத் மீண்டும் ஏற்படுவது அருகில் இருக்கின்றது’ என்ற தலைப்பின் கீழ் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது:

“அல்லாஹ்வின் உதவி வரப்போகின்றது. கிலாஃபத் நிலைநாட்டப்படும் என்பதில் நம்பிக்கை கொண்டவர்களுக்கு அல்லாஹ்வின் மீது வலுவான நம்பிக்கை இருக்க வேண்டும். கிலாஃபத் மீண்டும் நிறுவப்படுவது தொடர்பாக பெருமானார் (ஸல்) அவர்கள் பல முன்னறிவிப்புகளைச் செய்துள்ளார்கள். இமாம் அஹ்மது அவர்கள் அறிவிப்பு செய்கின்றார்கள். ரஸுலே கரீம் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: இறைவன் நாடும் வரை உங்களிடையே நபித்துவத்தின் இந்தக் காலக்கட்டம் இருக்கும். பிறகு அல்லாஹ் இதை முடிவுக்குக் கொண்டு வர விரும்பும்போது இதை (நபித்துவ காலக்கட்டத்தை) முடிவுக்குக் கொண்டு வந்து விடுவான். (இதற்குப் பிறகு) கிலாஃபத்தே ராஷிதா (நேர்வழியிலுள்ள கிலாஃபத்) அல்லாஹ் (அதனை நிலைத்திருக்கும்படி செய்ய) விரும்பும் வரை நிலைத்திருக்கும். பிறக அல்லாஹ் அதை முடிவுக்கு கொண்டு வர விரும்பும்போது அதை முடிவுக்குக் கொண்டு வந்து விடுவான். பிறகு (அது இருந்த இடத்தில்) கொடுங்கோல் ஆட்சி நிலைத்திருக்கும். அல்லாஹ் நாடும் வரை அது நிலைத்திருக்கும். பிறகு அல்லாஹ் அதை முடிவுக்குக் கொண்டு வர விரும்பும்போது அதை முடிவுக்குக் கொண்டு வந்து விடுவான். பிறகு பலாத்காரமான ஆட்சியின் காலக்கட்டம் இருக்கும். அல்லாஹ் நாடும் வரை அது எஞ்சியிருக்கும். பிறகு அல்லாஹ் அதையும் முடிவுக்குக் கொண்டு வர விரும்பும்போது அதை முடிவுக்குக் கொண்டு வந்து விடுவான். பிறகு மீண்டும் கிலாஃபத்தே ராஷிதா (நேர்வழியிலுள்ள கிலாஃபத்) நிலைபெறும். இதற்குப் பிறகு பெருமானார் (ஸல்) அவர்கள் அமைதியாக இருந்தார்கள். இந்த நபிமொழி நபித்துவத்தின் அடையாளங்களில் ஓர் அடையாளமாகும். ஏனென்றால், இது மறைவான செய்திகளைத் தெரிவிக்கின்றது. இந்த நபிமொழியில் நபித்துவம், கிலாஃபத், கொடுங்கோல் ஆட்சி, பலாத்காரமான ஆட்சி ஆகியவை தோன்றும் என்று குறிப்பிடப்பட்டிருக்கின்றது. இவற்றில் பெரும்பாலானவை தோன்றி விட்டன. இப்போது இதில் நாம் பார்ப்பதற்கு எஞ்சியிருக்கக் கூடிய விஷயம் நபிமொழியின் இறுதிப் பகுதியாகும். அதாவது, மீண்டும் கிலாஃபத்தே ராஷிதா நிலைபெறுவதாகும்.” *(கிலாஃபத் தமாம் மஸாயில் கா ஹல் - தில்லியிலுள்ள மில்லி பதிப்பகத்தார் வெளியிட்ட நூல்)*

அல்லாஹ் முழு உலகையும் உண்மையான இஸ்லாமிய கிலாஃபத்தின் அருளின் நிழலின் கீழ் இருக்கும்படி செய்வானாக! ஆமீன்.

☆☆☆

---

(குத்பா தொடர்ச்சி...)

ஹுஸைன் பக்ஷ் ஸாஹிப் அவர்களின் மகள்வழிப் போத்தியுமாவார். அன்னாரின் தந்தை மதிப்பிற்குரிய மலிக் மஹ்மூது குர்ஷித் ஸாஹிப் அவர்கள் தஅமீர் (ரப்வாவின் கட்டடக் கமிட்டி) –ன் தொடக்கச் செயலராக இருந்தார்கள். மர்ஹூமா ஒரு நீண்ட காலம் உள்ளூர் சதர் லஜ்னா இமாயில்லாஹ்வாக தொண்டாற்றும் நற்பேறு பெற்றார்கள். தனது அனைத்து விவகாரங்களிலும் அல்லாஹ்வையே சார்ந்து நிற்கக் கூடியவராக இருந்தார். அதிகமாக துஆ செய்பவராகத் திகழ்ந்தார். விருந்தோம்பல் செய்யக் கூடியவர். ஏழைகளைக் கவனித்து வந்தார். பொருள் தியாகம் செய்யக் கூடியவராக இருந்தார். கிலாஃபத்துடன் கலப்பற்ற, விசுவாசமிக்க தொடர்பு கொண்டிருந்தார். நன்றி செலுத்துபவராகவும், பொறுமையாளராகவும் இருந்தார்கள். சாயிவால் என்ற ஊரில் அஹ்மதிகள் பலர் கைது செய்யப்பட்ட போது அன்னாரின் கணவர் அமீராக இருந்தார். எனவே, ஏராளமானவர்கள் அன்னாரைச் சந்திப்பதற்காக விருந்தினர்களாக வருகை தந்தனர். அவர்களுக்கு விருந்தோம்பல் செய்தார்கள். மர்ஹூமாவின் கணவர் டாக்டர் அதாவுர் ரஹ்மான் ஸாஹிப் சுமார் 40 ஆண்டுகள் ஜமாஅத்திற்கு தொண்டு செய்து வந்துள்ளார். அப்போது மர்ஹூமா அதிக மகிழ்ச்சியுடன் தனது கணவருக்கு உறுதுணையாக இருந்தார்கள். தலைமையகத்திலிருந்து வருகை தரும் விருந்தினர்களையும் சிறப்பாக கவனித்து வந்தார்கள். அன்னாரின் பிள்ளைகள் அனைவரும் கிலாஃபத்துடன் விசுவாசமிக்க, மாசற்ற தொடர்பு வைத்துள்ளனர். அந்த அளவுக்கு மர்ஹூமா தமது பிள்ளைகளுக்கு தர்பிய்யத் வழங்கியுள்ளார்கள். அல்லாஹ்வின் அருளால் அவர்கள் வஸிய்யத் செய்த பெண்மணியாக இருந்தார்கள். மர்ஹூமாவிற்கு 5 மகன்களும், 3 மகள்களும் உள்ளனர். அல்லாஹ் அன்னாரின் பிள்ளைகளையும் நன்மைகளில் நிலைநிற்கச் செய்வானாக! மேலும் அவர்களின் எதிர்கால சந்ததிகளையும் ஜமாஅத்திற்கு பயன் சேர்க்கும் மக்களாக ஆக்குவானாக! ஆமீன்.

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar, at Fazle-Umar Printing Press Qadian, Harchowal Road, Qadian
Distt: Gurdaspur-143516, Punjab, India. And published at office of the Weekly Badar Moh-Ahmadiyya, Harchowal Road P.o:Qadian Distt:Gsp-143516, Punjab.India.Editor: Muzzammil Ahmad